உ

கடவுள் துணை.

செந்தமிழ்.

தொகுதி-௩] விசுவாவசுஹு புரட்டாசிமீ [பகுதி-௧௧

கம்பர் குறித்த தமிழ்ப்பெருமை.

இக்காலத்துத் தமிழாராய்வாருட் சிலர் தமிழை வடமொழியினின்று திரிந்த மரூஉமொழியெனவும் சிலர் அவ்வாறு திரியாத்தனிமொழியெனவுங் கூறுவர். வேறுசிலர் தமிழ் என்னும் பெயரே திரமிளம் என்பதன்றிரிபு எனவுரைப்பர். பின்னர்ச்சிலர் அப்பெயர் தமிளென்பதனடியாய்ப் பிறந்ததென்பர்: சிலர் தமிழ் என்பது இனிமையென்னும் பொருட்டாதலின் அதுபற்றி அப்பெயர் எய்திற்றென்பர். சிலர் தமிழ்மொழி சிவபிரான்பாற்றோன்றியதெனவுரைப்பர்; சிலர் தமிழ்மொழி என்றுமுள்ளதென வுரைத்து அதனிலக்கணமே சிவபிரானருளினர் என்பர். சிலர் அகத்தியர் அவலோகிதன்பாற் றமிழ்கேட்டார் என்பர்; சிலர் சிவபிரான்பாற் கேட்டனர் என்பர். சிலர் அகத்தியர் தமிழிலக்கணமே செய்திலர் என்பர். சிலர் தமிழ் வடவெல்லையாகிய வேங்கடத்தைக் குமரக்கடவுள் வரைப்பு என்பர். சிலர் அதனை நிலங்கடந்த நெடுமுடியண்ணலதென்பர். சிலர் பாண்டிநாட்டைச் செந்தமிழ்நாடென்பர்; சிலர் சோணாட்டை அங்ஙனங் கூறுவர். சிலர் செந்தமிழ்ப் புலவர்பலர் ஒருங்குகுழீஇயாராய்ந்த சங்கமென்பது முன்னில்லையென்பர். இவ்வாறு தமிழின்பெருமை வரலாறு முதலியனபற்றிக் கேட்கப்படுவன வேறுவேறு மிகப்பலவாம். இன்னோரன்னபலவற்றைப்பற்றி இற்றைக்குப்பன்னூறுவருடங்கட்குமுற் சிறந்துவிளங்கிய அரியகல்வியிற் பெரியகம்பர் கருத்தென்னவாமென ஆராய்வது இக்காலைத் தமிழ்மக்களால் விரும்பப்படுவதேயாகும்.

கம்பர் சீராமாயணமென்னுந் தேவபாடைக்கதையினையே பாடப்புக்காரேனும், தாம் அத்திருக்கதையினைப்பொதிவது, தம்மருமைத்

தாய்மொழியாகிய பெருமைத் தமிழ்க்கண்ணேயாகலான் தாங்கண்டு கேட்டுணர்ந்த தமிழ்நாட்டியல்புகளையும், தமிழ்வழக்குகளையும், தமிழ்நூற்பொருள்களையுமேகொண்டு கோசலைநாட் டியல்புகளையும் அயோத்தியர் வழக்காசாரங்களையும் வருணித்தனர் என்று கருதுதலே பொருந்திற்றாகும்; என்னையெனின், மிகப்பழையகாலத்தேநிகழ்ந்தன, வும் பாடையாலும் வழக்காலும் இயல்பாலும் பலவேற்றுமைப்பட்டனவுமாகிய வேற்றுநாட்டுச் சரிதைகளை மிகப்பிற்பட்ட காலத்தே அவ்வேற்றுநாட்டுப்பரிசயமில்லாரொருவர் தந்தாய்மொழியிற் புனைந்துரைக்கப் புகின், அவர்க்குத் தாங்கண்டு கேட்டுணர்ந்த தந்நாட்டு வழக்கியல்புகளேயன்றி வேறுதோன்றாவாதலான் என்க. வான்மீகிமுனிவர் "கோஸலோ நாம முதித:" (பால - ரு,ரு) என்ற சுலோகம் ஒன்றானே மிகச்சுருங்கவுரைத்த கோசலநாட்டினைக் கம்பர் வருணிக்கப்புக்கு மழையைமுன்னேதி யாற்றைச்சிறப்பித்து நானிலம் பகுத்துக்கொண்டு விரித்துப் பலபலபாடல்களாற் புனைவதெல்லாம் தமிழ்நாட்டுஇயல்பும் வழக்கும்பற்றியேயாகும். நாட்டுவருணனையில் மருதத்தையே மிகுத்துக்கூறுவதும் தாங்கண்ட காவிரிநாட்டியல்பு கொண்டேயாம். கம்பர் "காவிரிநாடன்ன கழனிநாடு" எனவும் "தெய்வப்பொன்னியே பொருவுங்கங்கை" எனவும் "பொன்னிநாட்டுவமைவைப்பை' எனவும் ஆங்காங்குப்பாடுதலாலும்இக்கருத்து வலியுறுவதென்க. அம்முனிவர் நூற்றுக்கணக்கான சுலோகங்களால் மிகவிரித்துப்புனைந்த தசரதருடைய அசுவமேதத்தை "முகமலரொளிர்தர" (திருவவதாரம்-அசு.) என்னுஞ் செய்யுளொன்றானே கம்பர் மிகச்சுருங்கவுரைத்துவிடுதலும் தமிழர் சுவைக்கேற்பது கருதியேயாம். கம்பர் வான்மீகிமுனிவர்போல அயோத்தியை *அஷ்டாபதாகாரபான கட்டிடங்களையுடைத்தெனவும் †இராமனைக் காகபக்ஷம் எனப்பெயரிய மயிர்முடியுடையனெனவும் கூறினாரில்லை. இவ்வாறு தமிழ்நாட்டில்லைபோலும். கம்பர் "நம்பன் மாதுலன் வெம்மையை நண்ணினான்" (ஆற்றுப்படலம்-ரு) என்புழி மகட்கொடுத்தானை மாதுலன் என்னும் பெயரால் வழங்கினார். மாதுலன் என்பது

---

* பாலகாண்டம்-ரு-கசு.

† ,, ரு0-உக.

வடமொழியுள் தாயுடன்பிறந்தானுக்காவது. தாயுடன் பிறந்தானே மகட்கொடுத்தற்குரியனாதல் தமிழ்நாட்டுத் தொன்றுதொட்ட வழக்கம்; "கண்போன்ற மாமன்மகள் கண்மணிப் பாவையன்னபெண்" (சிந்தாமணிப்பதிகம்-௨௨.) எனவருதலானுமுணர்க. இவ்வழக்குப் பற்றியே மாமன் என்பது தமிழில் தாயுடன் பிறந்தானுக்கும் மகட்கொடுத்தானுக்கும் பொதுவாக வழங்கப்படும். "மாமனா னென்னு மதத்தா லுனையிகழ்ந்து, தோமுற்றார் தக்கனார் சோமேசா" என மாமனென்பது மகட்கொடுத்தானுக்காயிற்று. இத்தமிழர் வழக்குப்பற்றியே மாதுலன் என்பதை மகட்கொடுத்தானுக்கு வழங்கினராவர்.

இங்ஙனமே கம்பர் முதனூற்கதைகளையும் தமிழர் சுவைக்கும் இயல்புக்கும் ஏற்றபெற்றியாற்றிரித்தும் சேர்த்தும் விரித்தும் விடுத்துங்கூறியன பலவுள. இராமனும் சீதையும் மிதிலையில் வின்முறித்தற்குமுன்னே ஒருவரொருவரைக்கண்டுவிழைவுமிகுத்துக் காமத்தால்வருந்தினர் எனவைத்துவருணித்தல் முனிவர்உடன்படாதது. "ஒத்தகிழவனுங் கிழத்தியுங் காண்ப" (தொல்-கள-௨) என்பதனாற் பிறப்பு முதலியவற்றானொப்புமையுடைய தலைவனுந் தலைவியும் ஒருவர் முயற்சியானன்றித் தனியெதிர்ப்பட்டு நோக்கெதிர்நோக்கி ஒருவருள்ளத்தொருவர்புகுந்து ஈருடற்கோருயிர்போல இயையும் உழுவலன்பினையே தலையாய காமம் என்பது தமிழ் வழக்காதல்பற்றிக் கம்பர் அங்ஙனங் கூறினராவர். "அண்ணலு நோக்கினானவளு நோக்கினாள்" (மிதிலைக்காட்சி-௩௫) "இருவரு மாறிப்புக்கிதய மெய்தினார்" (ஷை-௩௭) "ஒருங்கிய விரண்டுடற் குயிரொன்றாயினார்" (ஷை ௩௮) என இவர் ஓதியனபற்றியுணர்ந்து கொள்க. முனிவர் சூர்ப்பநகைக்கு மூக்கரிதலே கூறினராகவும் கம்பர் அம்மூக்குடன் முலையுங் காதும் அரிதல் கூறுவர். "மூக்குங் காதும்வெம் முரண்முலைக்கண்களுமுறையாற், போக்கி" (சூர்ப்ப-௬௪) "நங்கையிருஞ் செவி முலையுமூக்கு மரிந்தநாள்" (அங்கதப்படலம்.) என வருதலானுமுணர்க. "முலையிரண்டு மில்லாதாள் பெண்காமுற் றற்று*" என்பதும் "கா

* திருக்குறள்-௪௱௨.

திரண்டுமில்லாதா ளேக்கழுத்தஞ் செய்தலும் *" என்பதும் தமிழ் நூல் வழக்காதலால் முலேயரிந்து அவள் பெண்மையைக் குலேத்தும் காதரிந்து அவள் தலேயெடுப்பிணேத் தொலேச்தும் மூக்கரிந்து அவள் பிறர்முன் முகங்காட்டலே யொழித்தும் போக்கினர் என்றல் ஆண்டைக் கேற்பதேயாம். இராவணன் சீதையைத் தொடாமலே பன்னசாலேயோடு பெயர்த்துக் கொண்டேகினுன் எனக் கம்பர் கூறுவது முனிவர் கூற்றுக்கு மாறும். அரக்கன் உலகுக்கொருதாயைத் தொட்டிழுத்துச் சென்றான் என்பது பெருந்தமிழரான தம்பத்திக்கும் தந்நாட்டார் பேரன்பிற்கும் பொருந்தாதாதலின் அவ்வாறு கூறினர். சீதை இலங்கையிற் சிறைபிருந்த காலத்து ஊண்டுறந்திருந்தனளென்பர் கம்பர். இந்திரன் நாளுந்த நம் பாயசத்தின் பகுதியை உண்டு உயிர் தரித்திருந்தனளென்றார் முனிவர். இதுவும் பத்தியான் மிகுத்துக் கூறியவாறும். இங்ஙனம் சொல், பொருள், வழக்கு, கதை முதலியவற்றையும் தமிழுக்கியையக்கொண்டு இவர் கூறியன வெல்லாம் ஒவ்வொன்ருக எடுத்துக் காட்டப்புகின் மிக விரியுமென்றுணர்க. சுருங்கவைத்து விளங்கவுரைக்கின் இவர் தமிழ் மாட்டுற்ற அளவிலன்பினல் தாமெடுத்துக்கொண்ட தெய்வக்கதையின் றனிநாயகனுன சீராமமூர்த்தியையும் தமிழ் முழுதுணர்ந்த தமிழறிவனுகக் கூறுவர். இதனே "தென்சொற் கடந்தான் வடசொற்கலேக்கெல்லேதேர்ந்தான்" (அயோத்தி-நகர்நீங்கு-கசം) என இவர்வழங்குதலானுணர்க. நச்சினர்க்கினியர் சிந்தாமணி யுரையில் (குணமாலே-சஉ) சாதாரணவரசராகிய விக்கிரமாதித்தனும், சீவகனும் முறையே எறும்பின் பாஷையையும் சுரும்பின் பாஷையையும் உணர்ந்திருந்தனரெனக் கொள்ளுதலாற் கல்வியிற்பெரியர் தெய்வவேந்தாகியசீராமமூர்த்தியைத் தமிழ் வல்லவனுகவுங் கூறுதல் இழுக்காதென்க. எடுத்துக்கொண்ட கதாநாயகனேத் தமிழ்ச்சுவை யறியானுகக்கொண்டு அவனேச் செவ்விய மதுரஞ் சேர்ந்த நற்றமிழாற் றுதிப்பதே இழுக்காமெனக்கொள்க. இவ்வாறு தமிழன்பும் தமிழறிவும் ஒருருக்கொண்டாற் போன்ற இக்கல்வியிற் பெரியாருக்குத் தமிழைப்பற்றித் தனியே யுரைத்தற்கு அற்றம்வாயாவிடினும் அதன் பெருமையையும் அதன் றென்மை வரலாறு முதலியவற்றையும் பற்றிச் சிறி

---

* சிறுபஞ்சமூலம்-இ.

தும் விளக்காமற் போயினரில்லை. இவர் பழைய தமிழ்ப் புலவர்களையும் அவர்களினிய கவிகளையும் அக்கவியின் சொன்னடை பொருளமைதிகளையும் அவற்றாலெய்து மின்பத்தினையுமே பலவிடத்தும் வாயாரப் புகழ்ந்து உயர்ந்த உவமையாகக் கூறுவர். "முத்தமிழ்த் துறையின் முறைபோகிய வுத்தமக் கவிகள்" (பாயிரம்) "துறைபடுத்த விருத்தத் தொகைக்கவிக் குறையடுத்த செவிகள்" (ஷை) "செவ்வியமதுரஞ் சேர்ந்தநற் பொருளிற் சீரிய கூரிய தீஞ்சொல் வவ்விய கவிஞர்" (பால. நகர். க.) "தென்னுண் டேனிற் றீஞ்சுவை செஞ்சொற் கவியின்பம்" (மிதிலை-உ௩) "சான்றோர் கவியெனக் கிடந்த கோதாவரி" (சூர்ப்பந) "பாவருங் கிழமைத் தொன்மைப் பருணிதர் தொடுத்த பத்தி, நாவருங் கிளவிச் செவ்விநடைவருநடையள்" (நாடவிட்ட-௬௪) என வருவனவற்றான் உய்த்துணர்ந்து கொள்க.

இவர் தாடகைப்படலத்துத் "தமிழெனு மளப்பருஞ்சலதி தந்தவன்" எனவும் அகத்தியப்படலத்து "நீண்ட தமிழ் வாரிநிலமேனிமிரவிட்டான்"* எனவும் ஆறுசெல்படலத்து "எத்திறத்தினுமேழுலகும்புகழ் முத்துமுத்தமிழும்" எனவும் பம்பைப்படலத்துத் "தன்பாற்றழுவுங்குழல்வண்டு தமிழ்ப்பாட்டிசைக்குந் தாமரையே" எனவும்; சடகோபரந்தாதிக்கண் 'இழைத்தாரொருவருமில்லா மறைகளையின்றமிழாற் குழைத்தார்" எனவும் கூறினராதலான் இவர் தமிழை அளத்தற்கரிய பெருங்கடலாகக்கொண்டு அது பல்வகையானும் பல்லுலகும் புகழத்தக்கதெனவைத்து அஃது இனிமையென்பதையே பொருளாக வுடைத்தென்று காட்டி, அது வடமொழிபோற் காடிந்நியம் உடையதின்றிக் குழைவேஇயல்பாகவுடைத்தென்றுரைத்துத் தமிழின்பெருமையை நன்கு விளக்கினர். இக்காலத்துப்புலவர் பல்பிறப்புத்தோறும் இடை விடாமற் பயின்றாலும் எய்தற்காகாவென ஒருதலையாகத் துணியப்படும் பெருங்கல்வியும் நுண்ணறிவும் அருங்கவித்திறனும் இயல்பிற் பெற்றுப் பாற்கடற்போலப் பல்லாயிரஞ் செய்யுட்களை இங்கிலவுலகில் நிமிர்ந்தேறவிட்ட தெய்வப்புலவரே தமிழை அளப்பருஞ் சலதி எனவும் நீண்ட

* 'நீண்டதமிழாலுலகைநேமியினளந்தான்' எனவும் பாடம்.

வாரி எனவும் உரைத்தருளுவரானால் அதனகலமும் ஆழமும் பெரும்பொருளமைதியும் யாமேயளத்தற்குரியேம். தமிழ்ப்பாஷை இரண்டு மூன்று வருஷத்துப் படிப்பின் முற்றுமென்று வாய்பிதற்றுவார் இவ்வரியபெரியார் வாய்மொழிவழி நின்று சிறிது சிந்திப்பாராகுக. அசரீரி, நாமகள், முருகக்கடவுள், சிவபிரான் முதலாகிய தெய்வதங்களும் புகழ்ந்தோதிய பாடல்கள் நிறைதலால்தமிழ், பல்லுலகும் புகழ்வது எனக்கூறியது மிகையன்றாம். ஸ்ரீசடகோபராந் தெய்வங்கவிவாணர் "பாலேய்தமிழர்" எனப்பராவுதலால் தமிழின் இனிமையுங்குழைவுந் தூய்மையும் எளிதினறியத்தகும். இவ்வாறே சான்றோர்பலருந் தமிழைக்கூறுமிடனெல்லாந் தனியேகூறாமல் தட்பம், ஒட்பம், வண்மை, நறுமை, அருமை, பெருமை, இனிமை, செம்மை, பசுமை, நன்மை, விழுப்பம் முதலிய குணங்களாற் சிறப்பித்தே கூறுதலானும் இதனியல்புணரப்படும். இத்துணைக்குணங்களாற் சிறப்பிக்கப்படும் தீந்தமிழை ஒருசாரார் ஒன்றின் மரூஉமொழி என்பராலெனின் அது கல்வியிற் பெரியார்க்குக் கருத்தன்றாம் எனவுணர்க. அவர் அகத்தியப்படலத்து "என்றுமுள தென்றமிழியம்பியிசை கொண்டான்" என்பதனால்தமிழை என்றுமுள்ளதென விளங்கவைத்தல் காண்க. ஒன்றினின்றுமருவிய மரூஉவானால் இதற்குத்தனியே என்றுமுளதாதற்றன்மை யெய்தாதென்பது ஒருதலையாம். மற்று, இத்தமிழை இயம்பி இசைகோடலாவது எஞ்ஞான்றுமுளதாய தமிழ்மொழிக்கு இலக்கணம் வகுத்துப்புகழ்பெறுதலாம் என்பது. புகழாவது குறுமுனியாகிய அகத்தியர் தமிழ்முனியெனச் சிறந்தோங்குதலாம். ஈண்டு 'என்றுமுள தென்றமிழ்' எனவுரைத்துவைத்து மேல்,

"உழக்குமறை நாலினு முயர்ந்துலக மோதும்
வழக்கினு மதிக்கவி னினும்மரபி னாடி
நிழற்பொலி கணிச்சிமணி நெற்றியுமிழ் செங்கட்
டழற்புரை சுடர்க்கடவு டந்ததமிழ் தந்தான்."

என்பதனாற் சிவபிரான்றந்ததமிழ் என்பராலெனின் ஆண்டுச்சிவபிரான் தந்தது எனக்கூறியதும் தமிழிலக்கணத்தையே யாமென்க. சிவபிரான்றந்த தமிழிலக்கணத்தையே அகத்தியர் உலகிற்குத்தந்

தார் என்பதே இதன் கருத்தாம். சிவபிரான் பாணினிக்குணர்த்தியதும் வடமொழி யிலக்கணத்தையேயாகும். அதுபோல இதனையுங் கொள்க. 'நான்மறையினும் உலகவழக்கினும்கவின்பெற நூலினும் முறைப்பட ஆராய்ந்து கடவுள் தந்த தமிழ்'என்றதனாலும் அஃதிலக்கணமேயாவதறிக. நான்மறையினாராய்ந்தன:—மொழிக்குமுதற்காரணம் எழுத்தென்றலும், அச்சும்அல்லுமாம் அவற்றின் வேற்றுமையும் கலப்பும் இயக்கமும் கருதி அவற்றிற்கு உயிரையும் உடலையும் உவமையாகக்கண்டு அங்ஙனமே குறியிடுதலும், அவற்றிற்குப்பிறப்பு வருணமுதலிய வுணர்த்தலும், அவற்றிற்கு மாத்திரைகாண்டலும், அவற்றிற்சிலவற்றிற்குப் புலுதங்கோடலும், அறம் பொருள் இன்பப்பகுதிகோடலும், நிலங்கட்குத்தெய்வங்கள் கூறலும், யாமோர் கூட்டமுடன்படலும், அந்தணர் அரசர் வணிகர் வேளாண்பக்கத்தியல்பு காட்டலும், அங்கதம் பிசி மந்திரம் வாய்மொழி முதலியன வகுத்தலும், பிறவும் ஆம். உலகவழக்கினாராய்ந்தன:—இயற்சொல் திரிசொல், செந்தமிழ்ச்சொல், கொடுந்தமிழ்ச்சொல், மரீஇயினசொல், மருவாமுதற்சொல், மங்கலச்சொல், அமங்கலச்சொல், இடக்கரடக்குக் குழூஉக்குறிச்சொல் முதலியனவும், மரபியலிற் குறித்தனவும், பிறவுமாம். மதிக்கவினினாடியன:—தமிழ்நாட்டுத்தொன்றுதொட்டுக்கேள்வியான்வந்த அம்மானைவரி, ஊசல்வரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர்குரவை, வள்ளைப்பாட்டு, உழத்திப்பாட்டு, குறத்திபாட்டு, வெறிப்பாட்டு என்பனபோன்றபாடல்கள்பற்றி ஆராய்ந்தனவாம். மதி - நூல். அகத்தியனாற் செய்யப்பட்டது மூன்று தமிழிலக்கணம் என அறியப்படுதலால் இம்மூன்றாகிய இயல் இசை கூத்து எனப்பாகுபாடுசெய்தற்கேற்றவாறு, தமிழ் என்னும் பிண்டப்பொருள் அவரிலக்கணஞ்செய்வதற்குமுன்னே இருந்ததென்பது நன்கறியலாகும். இதனாற் சிவபிரான் திருவாய்மலர்ந்த தமிழிலக்கணத்தையே அகத்தியர் முத்தமிழிலக்கணம் எனச்செய்து தொல்காப்பியர் முதலிய பன்னிரு புலவர்க்கும் அளித்தவாறு கூறிற்றாம். தொல்காப்பியனாரும் அம்முந்துநூல்கண்டு முறைப்படவெண்ணிப் புலந்தொகுத்தோராதலால், தாம் அகத்தியர் வாயிலானுணர்ந்த அச்சிவபிரான் பரக்கவருளிய இலக்கணங்களி னொருபகுதியையே

சில்வாழ்நாட் பல்பிணிச்சிற்றறிவினர்க்கேற்றவாறு தொகுத்துச்சுருங் கவுரைத்தாரெனக் கொள்ளப்படும். இதுவே நல்லறிவுடைய தொல் பேராசிரியர்க்கும் கருத்தென்றுணர்க ; அவர்,

தாயிற் சிறந்தன்று நாணுடைய லாருக்கந் நாணுடைமைசால்
வேயிற் சிறந்தமென் றோளிதிண் கற்பின் விழுமிதன்றீங்
கோயிற் சிறந்துசிற் றம்பலத் தாடுமெங் கூத்தப்பிரான்
வாயிற் சிறந்த மதியிற் சிறந்த மதிநுதலே.

என்னுந்திருச்சிற்றம்பலக்கோவையுரையில் ["உயிரினுஞ்சிறந்தன்று நாணே நாணினுஞ், செயிர்தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று" (தொல் காப்பியம் - களவியல்-௨௨) என்றாராகலின் வாயிற்சிறந்தமதியிற் சிறந்த என்பதற்குத் தாய்போல நாண் சிறத்தலும் நாணினும் கற் புச்சிறத்தலும் ஆகிய இரண்டும் கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூல்க ளிடத்துச் சிறப்புடையபொருள் என்றுரைப்பினுமமையும்] என 'உயிரினுஞ் சிறந்தன்று நாணே' என்னுந்தொல்காப்பியத்தினை எடுத் தோதி அதனைக்கூத்தப்பிரான் வாயிற்சிறந்த நூலாகக்கொண்டு நாண் சிறத்தலும் கற்புச்சிறத்தலுமிரண்டும் அந்நூற்பொருளெனக் கூறு தற்குடன்பட்டதனாற் றெளிந்துகொள்க. இதனாலும் கூத்தப்பிரா னருளியதிலக்கணமென்ப துணரப்படும். இனிக் கம்பர் நாடவிட்ட படலத்தின்கண்,

"வடசொற்குந் தென்சொற்கும் வரம்பிற்றாய் நான்மறையு மற்றைநூலு
மிடைசொற்ற பொருட்கெல்லா மெல்லையதாய் நல்லறத்துக் கீறாய்வேறு
புடைசுற்றுந் துணையின்றிப் புகழ்பொதிந்த மெய்யேபோற் பூத்துநின்ற
வுடைசுற்றுந் தண்சார லோங்கியவேங் கடத்திற்சென் றுறுதிர்மாதோ." ()

" கோடுறுமால் வரையதனைக் குறுகுதிரே லுங்கொடிய கொடுமைநீங்கி
வீடுறுதிர்" * * * * (௨௧)

" பிறக்க முற்ற மலைநாடு நாடி யகன்றமிழ்நாட்டிற் பெயர்திர்மாதோ" (௩௦)

'தென்றமிழ்நாட் டகன்பொதியிற் றிருமுனிவன் றமிழ்ச்சங்கஞ் சேர்கிற் றீரேல்." (௩௧)

என ஓதியபின்னரும் ஆறுசெல் படலத்துள்,

" இருந்ததிற் றீர்ந்து சென்றார் வேங்கடத் திறுத்தகாலை." (௩௩)

"வலங்கொ ணேமி மழைநிற வானவ
னலங்கு தாளிணை தாங்கிய வம்மலை
விலங்கும் வீடுறு கின்றன மெய்ந்நெறிப்
புலங்கொள் வார்கட் கனையது பொய்க்குமோ." (௩௫)

"அனைய பொன்னி யகன்புன னாடொரீஇ
*   *   *   *
இனைய தேன்றமிழ் நாடுசென் றெய்தினர்." (௩௨)

"அத்தி ருத்தகு நாட்டினை யண்டர்நா
டொத்தி ருக்குமென் றுலுரை யொக்குமோ
வெத்திறத்தினு மேழுலகும்புகழ்
முத்துமுத்தமிழுந் தந்துமுற்றுமோ." (௩௩)

எனவும் கூறுதலான் வடசொல், தென்சொல் இரண்டிற்குந் தனிப் பேரெல்லையாய் விளங்கியது திருவேங்கடமலையென்றும், அம்மலை தன்னடைந்தார்க் கெல்லாம் வீடளிக்கவல்லதென்றும் அது வலக்கரத்துச் சக்கராயுதத்தைத் தரித்த மழைநிறவானவன் திருத்தாளிணை தாங்கியதென்றும் சேர சோழ பாண்டிய நாடுகள் மூன்றினுள்ளும் சிறப்பித்துத் தமிழ்நாடென்பது பாண்டிபநாடாமென்றும் அந்நாட்டுப்பொதிய முனிவன் தமிழ்ச்சங்கம்ஒன்று முன்னே உண்டு என்றும் அந்நாடே பல்லுலகும் புகழ்கின்ற முத்தையும் முத்தமிழையுந் தந்ததென்றும் விளங்கவைத்தனராவர். திருவேங்கடம் வடசொற்குத் தெற்கெல்லையாகவும் தென்சொற்கு வடவெல்லையாகவும் இருப்பதென்று கருத்தாம். தொல்காப்பியப் பாயிரவுரையில் நச்சினார்க்கினியர் வடவேங்கடத்தை 'நிலங்கடந்த நெடுமுடியண்ணலை நோக்கி யுலகந் தவஞ்செய்து வீடு பெற்ற மலை" என வுரைத்துள்ளார். அதுவும் "மால்வரையதனைக் குறுகுதிரேல் வீடுறுதிர்" எனவும் "மழைநிற வானவன் அலங்குதாளிணை தாங்கியவம்மலை விலங்கும் வீடுறுகின்றது" எனவும் ஓதிய பொருளையே தழீஇநிற்றல் நோக்கிக்கொள்க. ஸ்ரீ சடகோபரும் "திருவேங்கடநங்கட்குச் சமன்கொள்வீடு தருந்தடங்குன்றமே" எனப்பணித்தருளினர். "வேங்கடமென்னுமோங்குயர்மலையத்துச்சிமீமிசை...நன்னிறமேகநின்றதுபோலச்......செங்கணெடியோ னின்றவண்ணமும்" எனச் சிலப்பதிகாரத்துக் கூறியது
*

கொண்டு "மழைநிறவானவன் தாளிணைதாங்கிய அம்மலை" என்றார் எனினுமமையும். ஆசிரியமாலை யுடையாரும் * "புடையிது நெடுமால் வரைக் கப்புறம் புகினும்" எனவுரைத்தார். ஐயனாரிதனாரும்,

"வெறிகொ ளறையருவி வேங்கடத்துச் செல்வி
னெறிகொள் படிவத்தோய் நீயும்—பொறிகட்
கிருளீயு ஞாலத் திடரெல்லா நீங்க
வருளீயு மாழி யவன். (பாடாண்-௩௨)

என ஓதினர். பாரதம் பாடிய பெருந்தேவனாரும்

தேனோங்கு நீழற் றிருவேங்கடமென் றும்
வானோங்கு சோலை மலையென்றுந்—தானோங்கு
தென்னரங்க மென்றுந் திருவத்தி யூரென்றுஞ்
சொன்னவர்க்கு முண்டோ துயர்"

எனப்பாடியருளினர். கம்பர்திருவாக்கு இப்பல்சான்றோர் கருத்தையுந் தழீஇ விளங்குதல் கண்டுகொள்க. இனிக் 'காவிரிநாடன்ன கழனிநாடு' எனச் சோணாட்டை மேம்படுத்துரைக்கின்ற கம்பர் அதனை ஈண்டுத் தமிழ்பற்றிச் சிறப்பியாமற் பாண்டிநாட்டையே தென்றமிழ் நாடெனக்கூறி அதனைத் தமிழ்ச்சங்கத்தானும் முத்தமிழானும் புகழ்தலால் அதுவே செந்தமிழ்நாடெனக் கருதினராவரென உய்த்துணரப்படும். இவர் ஈண்டுக்குறித்த சங்கம் முதற்சங்கமாமென்பது "பொதியத்திருமுநிவன் றமிழ்ச்சங்கம்" என்றதனாலறியப்படும். ஈண்டுக்குறித்த சிலகொண்டு இக்காலத்தார் கருத்துக்கும் அக்காலத்துக்கல்வியிற்பெரியார் கருத்துக்கும் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளை நன்குணர்ந்துகொள்க.

இனிக் கம்பர் சடகோபரந்தாதிக் கண்ணே,

சுவடிறக் கத்தொட ராசைக் களிற்றைத் தொடர்ந்திரண்டு
கவடிறக் கட்டிய பாசத் தளைக்கண் பரிந்துசங்கக்
குவடிறக் குத்திய மாறப் பெயர்க்கோலை யானைநங்கா
யிவடிறத் தொன்றும் படரந்தி வான மிருள்கின்றதே.

என்னும் பாட்டிற் சடகோபரைச் சங்கமாகிய மலைக்குவடு இடியக்குத்திய மாறன் என்னும் பெயரையுடைய கொலையானை எனக்கூறியுள்

* புறத்திரட்டு - பல்வகை நிலையாமை.

ளார். இதனாற் சடகோபர் காலத்தே சங்கம் ஒன்றிருந்ததெனவும் அதனை அவர் வென்றனரெனவும் கம்பர் குறித்தனராவர். சடகோபர் சங்கமொன்றை வென்றகதை வைணவருக்குள்ளும் வழங்குகின்றது. அச்சங்கம் கூடலில் முந்நூறு புலவரையுடைத்தாயிருந்ததெனவும் அப்புலவரெல்லாம் வீற்றிருந்த தனிமாப்பலகை ஆழ்வாரருளிய ஓர் செய்யுள் வரைந்த ஓலையொன்றிற்கு இடந்தந்து வேறியார்க்கும் இடந்தராமற் றன்னுட்சுருங்கியதெனவும் அதுகண்டு புலவரெல்லாம் ஆழ்வாரைப்புகழ்ந்து பாடினரெனவும் கூறுவர். இதனுண்மை எவ்வாறோ எனக்கருதப்படுமாயினும், இவ்வரிய செய்தியின் குறிப்பு கல்வியிற்பெரியார் திருவாக்கினும் காண்டலால் இது முழுதும் பொய்யேயாமென நினைத்தற்கு இடமின்றாகிறது. இதற்கேற்ப ஆழ்வார் திருநகரியினின்று கிடைத்த சில பழைய தமிழ் ஏடுகளில் "சங்கத்தார்க்கு ஆழ்வார் அருளிச்செய்த அகவல்" என்ற தலைப்பின்கீழ்,

"அண்ட கோளத் தாரணு வாகிப்
பிண்டம் பூத்த பேரொழி லொருமை
யீருயிர் மருங்கி னாருயிர் தொகுத்து
நித்திலத் தன்ன வெண்மணல் பரப்பி
வேரும் வித்து மின்றித் தானே
தன்வலி யறியாத் தொன்மிகு பெருமர
மூவழி முப்பழ முறைமுறை தருதலி
னொன்றூண் டொண்சுவை தருவது மற்றது
கல்வி லெழுந்து கடவி லழுந்தி
யறுகாற் குறவ னீரற விளக்கு
நிறைபொழிற் குப்பை தறுகட் பொன்றுவித்
தறுகோட் டாமா விளக்கு நாட
னவனே தலையிலி யவன்மகன் முலையிலி
தானு மீனு னீனவும் படாஅ
ளெழுவர் மூவர் சிறுவரைப் பயந்தன
ளவளிவ னுவளென் றறித
ருகளறு காட்சிப் புலவரது கடனே"

என ஓரரும்பெருஞ்செய்யுள் காணப்படுகின்றது. இதன் பொருள் இப்போது நன்குவிளங்கவில்லை. இனி இச்சங்கப் புலவர்கள் முந்

நூற்றுவர் எனக்கேட்கப்படுதலால் இச்சங்கம் முதல் மூன்று சங்கமும் இல்லையென்பது எளிதிலறியத்தகும். முன்னை மூன்று சங்கத்துக்கும் பின்னே வேறுசங்கம் உண்டோ என ஆராயுமிடத்துத் திகம்பரதரிசனம் என்னும் ஓர் சைந சமய நூலின்கண் விக்கிரமசகம் ருஉசு- இல் (கி. பி. 470) பூச்சியபாதர் என்பாருடைய மாணுக்கருள் ஒருவராய வச்சிரநந்தி என்பவரால் தென்மதுரையில் ஒரு திராவிட சங்கம் கூட்டப்பட்டதென்று கூறப்பட்டிருத்தல் கேட்கப்படுகின்றது.* மதுரையில் இச்சைநர் தொகுத்த தமிழ்ச்சங்கம் கி. பி. 470- முதல் எத்துணைக்காலம் நடைபெற்றதென அறியப்படாவிடினும், அது திருஞானசப்பந்தமூர்த்தி நாயனர் காலத்துக்குப் பின்னும் ஆண்டிருந்ததெனக் கருதற்கு இடனில்லையாகும். அந்நாயனுரால் மதுரையிற் சைநர் தொலைவுண்டது பலநூல்களாற்றெளிந்தது. அந்நாயனர்காலத்துப் பாண்டியன் நெல்வேலிவென்ற நெடுமாறன். அப்பாண்டியனுடன் நெல்வேலியிற்பொருதவன் நந்திபோதவன்மனுடைய சேனுபதியான உதயசந்திரன் என்பதும், நந்திபோதவன்மன் காலம் கி-பி 710 முதல் கி-பி 760 வரையாம் என்பதும் உதயேந்திரசாஸநத்தாலும் பிறசாஸனங்களாலும் உய்த்தறியப்படுகின்றன. இதனுல் நெடுமாறனும் நந்திபோதவன்மனும் ஒருகாலத்தவராகத்துணியப்படுதலுடன் ஸ்ரீஞானசம்பந்தர்காலமும் அஃதாமெனக்கருதவுமாகும். அங்ஙனமாயின் மேற்குறித்த சைனர்தமிழ்ச்சங்கமும் கி. பி. 470 முதல் கி. பி. 760-வரைக்குமே இருந்ததாகவைத்துக்கொள்ளலாம். இக்காலந்தான் சைவர் சமணருடனும் சாக்கியருடனும் வாதுசெய்தகாலமாகும். சடகோபர் "இலிங்கத்திட்ட புராணத்திருஞ் சமணருஞ் சாக்கியரும், மலிந்து வாதுசெய்வீர்களு" மெனப்பணித்தலையும் ஈண்டைக்குநோக்குக. இச்சங்கந்தான் கிளிவிருத்தம், எலிவிருத்தமுதலிய நூல்களைத்தோற்றுவித்ததாகும். ஸ்ரீஞானசம்பந்தருடைய,

> கூட்டினர்கிளியின்விருத்தமுரைத்ததோரெலியின்றொழிற்
> பாட்டுமெய்சொலிப்பக்கமேசெலுமெக்கர்தங்களைப்பல்லறங்
> காட்டியேவருமாடெலாங்கவர்கையரைக்கசிவொன்றிலாச்
> சேட்டைகட்கெளியேனலேன்றிருவாலவாயரனிற்கவே.

---

* Bombay Royal Asiatic Society's Journal. No. XLIV, Vol. XVII, pp. 74.

என்னுந் தேவாரத்தான் இதனை உய்த்துணர்க. ஞானசம்பந்தர் காலத்துக்குப்பின்னர்க் கூடலில் வேறுசங்கமுண்டென்பது எவ்வாற்றானும் அறியப்படாமையாற் கல்வியிற் பெரியார்குறித்த ஆழ்வார்காலத்துச்சங்கம் இச்சைநசங்கமேயாமெனத் துணியப்படும். கம்பர் சடகோபரைத் "தெருளிற் கரும்பொக்கு மாயிரம்பாப்பண்டு செய்தவரே" எனப்பாடுதலால் ஆழ்வார் கம்பருக்கு மிசமுந்தியகாலத்தவராகக்கருதப்படுதலுங்காண்க.

இனியிக்கல்வியிற்பெரியாரால் மிகவுயர்த்துப்புகழப்பட்டதமிழ் நூல்கள் இரண்டெனத்தெரிகின்றது. அவை திருக்குறளுந்திருவாய்மொழியும். இவர் திருக்குறளை வேதமெனவும் திருவாய்மொழியினை உபநிடதம் எனவும் புகழ்வர்.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாருந்
தொழுதுண்டு பின்செல்வ ரென்றேயித் தொல்லுலகி
லெழுதுண்டமறை சொன்னல்" (ஏரெழுபது-௧௬)

"தேன்றலைத் தோன்று முபநிடதத்தை யென் றீவினையை
நின் றலைத் தொன்று நியாய நெறியை நிறைகுருகூர்
மன் றலைத் தோன்று மதுரகவியை" (சடகோபரந்தாதி-௬௨)

எனவருதலா னுணர்க.

(இன்னும் வரும்)

ரா-இராகவையங்கார்,
பத்திராசிரியர்.

சேதுபுராணம்.

சேதுபுராணமாவது சேதுவிலே முன்னிகழ்ந்த சரித்திரத்தினைக் கூறும் நூலேயாம். சேது—அணை. புராணம்—முன்னிகழ்ந்த சரித்திரம். இங்கே சேது என்றது ஸ்ரீராமசந்திரன் இலங்கை செல்லுதற்கு வழியாகத் தென்கடலிலே கட்டிய வரம்பினை. இந்தச் சேதுவிலுள்ள தீர்த்தமகத்துவமும், மூர்த்திமகத்துவமும், இராமேச்சுரம் என்னும் ஸ்தலமகத்துவமும், பிறவும் இப்புராணத்திலே விரி

த்துக் கூறப்படும். இப்புராணத்தினைத் தமிழ்ப் பாஷையிலே விருத்தப்பாவினத்திலே திருத்தமுறப் பாடிவைத்தவர் மதுரைமாநகரத்திலே வசித்த நிரம்பவழகிய தேசிகர். இவரோ இலக்கியலக்கணங்களிலன்றிச் சைவசித்தாந்த சாத்திரத்திலும் மகாவல்லவர். சிவஞான சித்தியாருக்குந் திருவருட்பயனுக்கும் இவர் செய்தவுரையே சித்தாந்த வன்மைக்குத் தக்க சான்ருகும்.

இப்புராணத்துள்ள கவிகளெல்லாம் கவிச்சிரேட்டர்களைவசியப்படுத்தும் அத்துணைச் சிறப்புடைய சொற்சுவைகளும், பொருட்சுவைகளுமுடையன, இலக்கியங் கற்கப் பிரவேசிக்கும் மாணவர்கட்கெல்லாஞ் சொற்பொருளுணர்ச்சி கைகூடுதற்குப் பேருபகாரமாயுள்ளது. இது பற்றியே செந்தமிழ்ப்பயிற்சியிலுஞ் செந்தமிழ்ப் பரிபாலனத்திலுஞ் சிறப்புற்றிருந்த ஸ்ரீமாந்-பொன்னுச்சாமித்தேவரவர்கள் இப்புராணத்திலே விருப்பமுற்று ஸ்ரீலஸ்ரீ நாவலரவர்கள் பரிசோதனை பெற்று வெளிப்படச் செய்தார்கள். அரிதுணரற்பாலனவாகிய திரிசொற்களும், இலக்கணவிஷய நாமங்களும், பலவகை மடக்கலங்காரவகைகளுஞ் சிலேடைவகைகளும், வேதாந்த சித்தாந்த விடயங்களும் பிறவும் இப்புராணத்திலே ஆங்காங்கு வருகின்றன; அவற்றுள்ளே சிலபல இங்கே காட்டுதும்.

திருநாட்டுச்சிறப்பு.

இல்லமென் கிளவி யந்நாட் டிருப்பவ ரிசைக்குங் காலை
வெல்லருங் கேள்வி மேலோர் விதித்திடு மிலக்க ணத்துட்
சொல்லிடும் பெயரே யேனைத் தொழிற்குறிப் பிரண்டி னுள்ளும்
நல்லதோர் பெயரே யன்றி நவின்றிட நாடி டாரே.

இங்கே பெயராயும் வினைக்குறிப்பு முற்ருயும் நின்று பொருள்படத்தக்க "இல்லம்" என்னுஞ் சொல்லினைஎடுத்துக்கொண்டு அவ்விரண்டினையுங் காட்டி அதன் வாயிலாக நாட்டிற்குச் சிறப்புக் கூறினர். இல்லம் என்பது பெயராய் நின்று வீடு என்னும் பொருளையும், வினைக்குறிப்பு முற்ருய் நின்று வறியேம் என்னும் பொருளையும் விளக்கும். "பெயரேயன்றி நவின்றிடநாடிடாரே" என்பதனல் அந்நாட்டவர் யாவருஞ் செல்வர் என்பது பெறப்படும்.

நைமிசாரணியச்சிறப்பு.

கட்டவிழ்ந்துபொலிகமலமென்னவெரிகாமர்வேள்வியழன்முன்னரோ
வட்டமாநிலம்வகுத்ததாதையெனமன்னுமாதவர்கண்மலரின்மேல்
எட்டுவாள்விழிவிரிஞ்சன்வைகியிடுமென்றிடும்பொருளைமன்றவே
விட்டலக்கணையிற்றுணர்த்திடுவர்வேறுகூறுவதென்மேன்மையே.

இங்கே மூவகை இலக்கணைகளுள்ளே விட்டலக்கணை என்பதனைச் சுட்டிக் கூறினார். மூவகை இலக்கணைகளாவன:—விட்டலக்கணை, விடாதலக்கணை, விட்டும் விடாதலக்கணை என்பன. விட்டலக்கணையாவது சொல்லின் பொருட்குப் பொருத்தமில்லாதவிடத்துக் கொள்ளப்படும் சம்பந்தம். விடாதலக்கணையாவது சொல்லின் பொருட்கும் பொருத்தமுள்ளவிடத்துக்கொள்ளப்படும் சம்பந்தம். விட்டும் விடாதலக்கணையாவது சொற்பொருளின் ஏகதேசத்தைவிட்டு ஏகதேசத்திற்குப் பொருத்தமுள்ள இடத்துக் கொள்ளப்படும் சம்பந்தம். இலக்கணையாவது முக்கியார்த்தஞ் சொல்லக்கூடாத இடங்களிலெல்லாம் உபசாரமாகச் சொல்லப்படும் பொருள். இங்கே கொள்ளப்பட்ட விட்டலக்கணைக்குக் "கங்கையிலிடைச்சேரி" என்பது உதாரணம். கங்கையென்னுஞ் சொல் தனது பொருளாகிய வெள்ளத்தை விட்டுக் கரையையே உணர்த்தும். அதுபோலப் பிரமன் தாமரைப் பூவில் இருப்பன் என்பதற்கு அதன் சமீபத்திலிருப்பனெனக் கொள்ளுதலே இங்கே பொருட்கு உபயோகமாகும்.

வேதாளவரதச்சருக்கம்.

வீசிய வுறைவாள் கொண்டு மேயவெஞ் சாபம் வீட்டி
யேசிலந் தணனு யங்க ணிருந்துசங் கற்பங் கூறி
நேசமோ டுதக மூழ்கி நிலைமொழி தன்னை நீத்தான்
பூசுர னென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்.

இங்கே ஒரு பிராமணன் தேவனாயினான் என்பதனை "நிலைமொழிதன்னை நீத்தான்—பூசுர னென்று தொக்க புணர்மொழி யிரண்டு தம்மில்" என்பதனாற் கூறினார். பூசுரன் என்னும் புணர்மொழியிலே பூ என்பது நிலைமொழி. சுரன் என்பது வருமொழி. நிலைமொழியாகிய பூ என்பதனை நீத்தான் எனவே சுரனாயினான் என்பதாம். சுரன்—தேவன்.

இராமதீர்த்தச்சருக்கம்.

பலத்திறு லிவற லின்றிப் பலபொருள் வைக ரோறு
நலத்திறு லுதவி மேவு நாளிலோர் சேணில் வாணி
உலத்திறு லுயர்ந்த திண்டோ ளுதிட்டிர வுனக்கா சானைச்
சலத்திறுற் கொன்ற நீங்கிச் சலத்திறுற் றீர்ந்த திந்நாள்.

நியாய நூல்களிற் சொல்லப்பட்ட பதினறு பதார்த்தங்களுள்ளே ஒன்றாகிய சலம் என்பது இங்கே பிரயோகிக்கப்பட்டது. சலமாவது ஒரு கருத்துப்பற்றிக் கூறிய மொழிக்கு மற்றொரு பொருள் படைத்துக்கொள்ளுதல். மற்றொருபொருள் படைக்கப்பட்டுச் சலமாக நின்ற மொழி "அசுவதாமனுவிபோனதுண்மையே" என்பது. அசுவதாமன் என்பது துரோணன் மகனுக்கும் யானை ஒன்றிற்கும் பொதுவாக நின்றது. அச்சொல்லே இங்கே துரோணன் இறத்தற்குக் காரணமாயிற்று.

இலக்குமிதீர்த்தச்சருக்கம்.

உறுங்கொடைத் தரும னிவ்வா றுவந்தன னிளைய ரோடு
நறுங்குளிர்க் கமலை வாவி நனைந்ததோர் நலத்தி னுலே
தெறுங்கொடு மிடியை யிந்தத் திருத்தடஞ் சேரு மாந்தர்
வெறுங்கையா ரென்னும் பேரின் மென்மையை வன்மை செய்யும்.

இங்கே வறியரைச் செல்வராக்கும் என்பதனை "வெறுங்கையா ரென்னும் பேரின் மென்மையை வன்மை செய்யும்." என்பதனுற் கூறினர். "வெறுங்கையார்" என்னும் பேரிலுள்ள மென்மை நகர மெய். அதனை வன்மை செய்யின், வெறுக்கையார் என்றாகும். வெறுக்கை—செல்வம். மென்மை—மெல்லெழுத்து. வன்மை—வல்லெழுத்து.

சங்கரபாண்டியச்சருக்கம்.

மகரகுண் டலங்கண் மின்ன மார்பினிற் கவுத்து வந்தான்
மகரவா ரிதியிற் றேன்றும் வளர்கதிர்ப் பரிதி மான
மகரவா கார நங்கை மணமக னுகக் கண்டான்
மகரகே தனனை வென்றோர் வாழ்கந்த மாதனத்தில்.

இங்கே மாநங்கை என்பதனை 'மகரவாகார நங்கை' என்றார். மா—இலக்குமி.

இங்கே பிரயோகிக்கப்பட்ட "பெயர்" "தொழிற் குறிப்பு" "நிலைமொழி" "புணர்மொழி" "மென்மை" "வன்மை" "மகரவாகா

ரம்'' என்பவைகளும், ''விட்டலக்கணை'' ''சலம்'' என்பவைகளும் இலக்கணநூல்களிலுந் தருக்கநூல்களிலும் பயிற்சியுடையார்க்கே புலப்படுவனவாம்.

இராமதீர்த்தச்சருக்கம்.

பொருவு போரிவை போற்பிற வின்மையால்
இருவர் போர்க்கு மிதர விதரமே
மருவு நேருவ மானம் வகுத்திடப்
பெருகு காதல் பெறிற் கவிவானரே.

இங்கே அலங்கார சாத்திரத்திலே சொல்லப்பட்ட இதரேதரவுவமையைக் கூறினர். இதரேதரவுவமையாவது இரண்டு பொருள் ஒன்றற்கொன்றுவமையாய் வருவது. இதனை உபமேயோபமை எனவுங் கூறுவர். இருவர் போரும் ஒன்றற்கொன்று உவமையாய் உயர்வு காட்டி நின்றதென்பது கருத்து.

கோடிதீர்த்தச்சருக்கம்.

காதலி னோடணை கன்றெறி கைத்துணை காணுமுன்
ஏதமில் செங்கை யிலங்கிய கன்றை யெறிந்திட்டார்
தீதுறு பேய்த்தன மான்மிசை வுற்றிடு செயனுடா
மாதர்க டாமிசை வுற்றன பேய்த்தன மயன்மிக்கார்.

கன்று—பசுவின்கன்று, வளையல். பேய்த்தனம்—பேயின்முலை, பேய்த்தன்மை.

இடையர் தமிற்பா லாடை கவர்ந்தா னிவனென்று
அடைவுறு தம்பா லாடை யளித்தா ரணியாழிச்
குடையவ னென்பா ரங்குலி யாழி யொருங்கீந்தார்
தொடையவிழ் கூந்தற் றெரிவையர் மோகமொர் துணையின்றால்.

பாலாடை—பாலினடை, வெள்ளைப்புடவை. ஆழி—சக்கரம், மோதிரம். இக்கவிகளிரண்டும் மடக்கோடு கூடிய பிரேளிகை.

சருவதீர்த்தச்சருக்கம்.

மங்கையுமை பங்குறை யபங்கவர வங்கூர்
கங்கையொடு திங்கள்புனை துங்கசன றங்குஞ்
செங்கையணி கங்கண புயங்க சிரகங்கொ
ளங்கைவிதி கங்குல வலங்கலக ளங்கா.

*

அபங்க—பங்கமிலாதவனே. விதிகம்—பிரமகபாலம். அலங்கல்—மாலை.

அரகர வராகமில ரானவர் பராவும்
வரகர வரானவர் விராவரண வஞ்சப்
புரகர புராதன கராவையடு புள்ளூர்
சரகர சராசன தராதர பிரானே.

அரகர—ஹர! ஹர! அராகம்—இச்சை. கரவர்—கள்ளமுடையவர். புரகர—புரத்தினையழித்தவரே! கராவையடு புள்ளூர்சர—விட்டுணுவாகிய அம்பினையுடையவரே! கரா—முதலை. சராசனம்—வில்லு. தராதரம்—மலை.

இக்கவிகளிரண்டும் அநுப்பிராசம் என்னும் வழியெதுகை அமைக்கப்பட்டுள்ளன.

திருநாட்டுச் சிறப்பு.

கன்னியர் வாணிபோலக் கழனியும் வள்ளை காட்டும்
அன்னவர் பாணிபோல வலந்தையுங் குருகு காட்டும்
மின்னிடை யார்மனம்போல் வேலியு முல்லை சேரும்
பொன்னனை யார்தனம்போற் பொதும்பரு மாரஞ் சேரும்.

இது செம்மொழிச் சிலேடையணி அமைந்து வந்த செய்யுள். வள்ளை, குருகு, முல்லை, ஆரம் என்பன சிலேடையாய் அமைந்து நின்ற சொற்கள். வள்ளை—உலக்கைப் பாட்டு, வள்ளைக்கொடி. குருகு—வளையல், பறவை. முல்லை—கற்பு, ஒரு கொடி. ஆரம்—முத்து, சந்தனம்.

திரிசொற்கள் அமைந்த கவிகளும், வேதாந்த சித்தாந்த சாரம் அமைந்த கவிகளும் பிறவும் பின்னர் எழுதப்படுவனவாகும்.

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்
விசுவாவசுஹூ புரட்டாசிமீ

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

நூலாராய்ச்சி.

—:o:—

ஐம்புலனுணர்ச்சி, அனுமானம், ஆன்றோர் வழக்கு, கேள்வி, நூலாராய்ச்சி முதலியன மாந்தரது அறிவைப்பெருக்கும் வருவாய்களாம். இவற்றுள் ஒன்றேனும் முற்றிலும் மெய்யறிவையே தருவதன்று: ஐம்பொறிகளுள்சிறப்புற்றிலங்கும் கட்புலனே; வான்சுடர்களுட் பெரிதைச் சிறிதாயும், சிறிதைப்பெரிதாயும், தன்னொளி இல்லதை உள்ளதாயும், மிகச்சேய்மையதையும் கிட்டினதையும் ஒத்ததூரத்தனவாயும், அசைவின்றி விளங்கிநிற்பதை விரைந்துசெல்வதாயும், கணத்துக்குப் பன்னூறு காவதம் செல்லும் கடுங்கதியிற் சுழலுவதை அசையாப் பொருளாயும், பல்வேறு பொய்த் தோற்றங்களைத் தெரிக்குமாயின், ஏனைய பொறிகளின் நம்பொணாத் தன்மையை விரித்துரைக்க வேண்டுவதில்லை. அனுமானமோ என்றும் உறுதிபயப்பதன்று. காலதேயங்களாற் பேதமுறும் ஆன்றோர் வழக்கு ஒருதன்மைத்தன்றாதலின் உண்மை தெளிந்தன்றி ஒருப்படற்குரியதன்று. செல்வத்துட் செல்வமெனக் கேள்வியைப் போற்றிய புலவரே கேட்டபொருளின்மெய்ப்பொருள் காண்பதே அறிவெனக்கூறிக் கேள்வியெல்லாம் மெய்யறிவைத்தாரா என்பதை நாட்டியுள்ளார். "எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள், மெய்ப்பொருள் காண்பதறிவு" என்னும் மூதுரை, நூலாராய்வார் மறக்கற்பாலதன்றே. இதனல், மனிதனது அறிவை விருத்திசெய்தற்கான சாதகங்களில் ஒன்றேனும் முழுநம்பிக்கைக் குரியதன்று என்பதும், ஒன்றின் விளைவை மற்றவற்றால் பரிசோதித்துத் தன்னுள் ஆராய்ந்து மெய்ப்பொருளை அறிந்தாலன்றி மனிதன் அபிவிருத்தி அடையான் என்பதும் பெறப்பட்டன. இனி, யாம் எடுத்துக்கொண்ட நூலாராய்ச்சி என்னும் விஷயத்தைச் சிறிது நுட்பமாய் ஆராய்வாம்.

நமது தற்கால அறிவு நிலைமைக்கும் நாகரிகத்துக்கும் நாமே நேரில் ஈட்டிய சுயாநுபவஞானம் எவ்வளவு காரணமாயிருக்கிறது என்பதையும் நம்முன்னோர்பெருக்கிவைத்துள்ள அறிவுப்பெருங்கடலினின்றும் பல்லாற்றானும் பல்வேறு அமயங்களிலும் நாம் மொண்டுகொண்ட அறிவு எவ்வளவு காரணமாயிருக்கிறது என்பதையும்

சற்று ஆராய்வாராயின் நமது முன்னோர்க்கு நாம்பட்டுள்ள கடனின் அருமையும் பெருமையும் சிற்றறிவினர்க்கும் தெற்றெனத் தெரியும். ஒவ்வொன்றையும் நம்முள் ஒவ்வொருவனும் தானே நேரில் அநுபவித்து யூகித்து அறிந்துகொள்ள வேண்டியிருப்பின், அந்தோ இவ்வின்னுயிர்வாழ்க்கை கணமேயும் பொறுத்தற்கரிய கடுந்துயராகவே தோன்றும். அறிவென்னும் பெருமலையின் முகட்டைக் காணமுயலும் மாந்தருள் ஒவ்வொருவனும் தனித்தனியே படிகள் சமைத்துக் கொண்டே மேலேறவேண்டும் என்றிருப்பின், இப்பொழுதினும் நூறுமடங்கு வாழ்நாள் நீடிக்கினும், சிகரம் சேர்வது கிடக்க, மலையின் அடிவாரத்தினின்றும் ஒருவனேனும் ஒருபனைத்துணையேனும் ஏறமாட்டானென்பது திண்ணம். இதுவுமன்றி, மாந்தருட்பெரும்பாலார் சாமானியராயும் மிகச்சிலரே கூரறிவினரராயும் இருத்தலின், இவர் வழிச்சேறலான் அவருறும் நன்மை அளப்பரிதாம். இதனால், முன்னோர் அரிதின் மூளை வியர்க்க முயன்றீட்டிய மெய்யறிவைப் பின்னோர்க்குக் கர்ணபரம்பரைவழியாயும் நூல்களின் வழியாயும் உதவுதல், அன்னோர் தேடிய செல்வப்பொருளை வைத்துப் போதலினும் எவ்வளவோ பேருதவி ஆகின்றது. நிற்க: ஆன்றோர் தாம் அறிந்துணர்ந்தவற்றை உள்ளவாறு சொல்லி நிறுத்தாது, அவற்றின் உறுதிப்பயனை விதிவிலக்குக்களாகஆங்காங்குப்பணித்திருக்கின்றமை என்னையோவெனின், சிற்றறிவினரும் சிக்கெனப் பற்றி வழிபடும் பொருட்டேயாம். உதாரணமாக, இலக்கண இலக்கிய வரம்பின்றி ஒருமொழியாளர் பலரும் தத்தம்மனப்படியே பேசுவாராயின் அவர் சமூகம் கடவுளாற் சபிக்கப்பட்ட பேபல்நகரமாக்களின் மந்தையை ஒத்துவிடும் என்பது உண்மையன்றோ. ஆகவே, முன்னோர் அரிதிற் பெற்ற அறிவு பின்னோர்க்குப் பயன்படுமாறும், வரம்பிலா ஒழுக்கும் மொழியும் வழங்கி ஐக்கியவிரோதமான பேதங்களும் மயக்கமும் தழைத்தோங்காவாறும் விதிவிலக்குக்கள் செறிந்த அறிவு நூல்கள் முன்னோரால் இயற்றப்பட்டு வழங்குதல் மனிதனது அபிவிருத்திக்கு இன்றியமையாப் பெருந்துணையாம்.

தாம் கூறும் விஷயபேதங்களான் நூல்கள் பல்வகைப்படுவன: இலக்கணங்கள், இதிகாசபுராணங்கள், காவியங்கள், சரித்திரங்கள்,

சாத்திர நூல்கள், பரீக்கை நூல்கள், வாத நூல்கள், விஞ்சை நூல்கள், ஆத்துமதத்துவ நூல்கள் முதலியன. இவற்றுள் முற்பட்ட நான்கின் ஆராய்ச்சியைமட்டும் ஈண்டெடுத்துப்பேசுவாம். இவற்றினேசாமானியரும் தலைபிடலானும், ஏனைய நூல்கள் அவ்வவ்விஷய பண்டிதர்க்கன்றி ஆராய்ச்சிக்கியையா ஆகலானும், இந்நால்வகை நூல்களினும் கூட அவ்வவ்விஷயங்களில் தேர்ந்தார் தலையிடலே தகுதி; ஆயினும் கற்போர் யாவரும் அவற்றோடு சிறிதேனும் மிகவேனும் பயிறலால் அவற்றைப் பொது நூல்களாக எடுத்துரைக்க நேர்ந்தது. நூலாராயப் புகுவார் எத்தன்மையராய் இருத்தல்வேண்டும்; அவர் துணிபு யாதாயிருத்தல்வேண்டும் என்னும் வினாக்களுக்கு நூலாராய்ச்சி எதன்பொருட்டு என்னும் சங்கை விடையளிக்கும். நூலாராய்ச்சி நூலின் உண்மைப்பொருளை அறியும்பொருட்டே என்று முன்னரோ கூறினும். 'தகநிற்றல்' இதன் பிற்பட்டதென்பதை உணர்க. ஆயின் உண்மையை அறியமுயல்வான் எத்தன்மையனாய் எத்துணிபினனாய் இருத்தல் தகுதியெனின், தேசம், சாதி, மதம் முதலியன பற்றிவரும் அபிமானம் எதனினும் எல்லாவற்றினும் உண்மை அபிமானமே அவனுக்குப் பெரிதாயிருத்தல்வேண்டும். யாதானும் ஒரு நூலாராய்ச்சியால் தன்னாடு, தன்குடி, தன்சமயம் இவை பிறிதொரு நாடு குடி சமயங்களுக்குக் கீழ்ப்பட்டனவாயேனும் தாழ்ந்த சிறப்பினவாயேனும் துலங்கின், அவ்வுண்மையை அவன் ஒப்புக்கொள்ள வேண்டும்; அன்றேல் அவனுற்ற கல்வித்துன்பம் பயனிலதாவதுமன்றி, அவன் பொய்யனே ஆகுவன். உண்மை எத்தன்மைத்தாயினும் உகந்தேற்கும் பேராண்மையிலான் நூலாராய்ச்சியில் தலையிடாமையே நலம். உண்மை இன்னதென்று உணர்ந்திருந்தும் அதை ஒளித்துப் பலியிட்டு ஏனையவற்றைப் போற்றிப்பேணும் அபிமானங்களெல்லாம் போலி அபிமானங்களேயாம். அத்தகைய அபிமானிகள் என்றும் புகழுடையார்; அவர் அவ்வாறு போற்றிய பொருள்களும் இழிவையே அடைப. "ஸத்யம் நாஸ்தி பரோ தர்ம:" (உண்மையினும் உயர்ந்ததோர் தர்மம் இல்லை) என்னும் பெருந்தர்மமே நூலாராயப்புகுவார் கைக்கோடற்கேற்ற மதம்; மற்றெம்மதமும் எவ்வபிமானமும் அன்னார்க்குப் பொருந்தா. அதை மறந்து ஏனையவற்றையே நினைந்துகொண்டு நூலாராய்வாராயின், நூலையும் இழித்

து, தாமும் வீண் இன்னற்பட்டு, உலகத்துக்கும் விபரீதங்களையே விளையாநிற்பர். நூலாராய்வார் ஒவ்வொருவரும் இந்நியாயப்படி ஒழுகுவராயின், அம்ம அம்ம! உலகத்திலே வீண்வாதங்களும் போலிநியாயங்களும் பொய்யுரைகளும் எத்துணை குன்றி, உண்மை அறிவு எவ்வளவு விரைவில் வளர்ந்தேறும்! தான் சத்தியவிரதியாயும், ஏனைய போலி அபிமானங்களை ஒழித்தவனாயும், தன் ஆராய்ச்சியால் வெளிப்பட்ட உண்மை யாதேஆயினும் துணிந்தேற்கும் பேராண்மை உடையவனாயும் இருப்பதும் அன்றி, நூலாராயப்புகுவான், சாமானிய மாந்தருக்குள் எங்குமேபொதுவாயும், நம்மவருக்குள் அதிகமாயும் பரக்கவிளங்கும் சிலபோலி அபிப்பிராயங்களை அறநீக்கிவிடுதலும் அவசியமாம். அவற்றுள் சில ஆவன:—ஒன்று, பண்டைக்காலத்தினும் இப்பொழுது அறிவுகுன்றியிருக்கிறது என்பது. இது பொய்யன்றேல், நம்முன்னோரையும் கடவுளையும் பழிக்கும் உரையாம். என்னை? தலைமுறைதோறும் அறிவு மேன்மேலும் பெருகாது குன்றிவரின், நம்முன்னோர் தந்தைமகற்காற்றும் கடனிற் பிழைத்தவராவர்; கடவுளும் தம் அருளுடைமை ஞானம் முதலிய குணங்களில் தவறினவராவர். முன்னைய பின்னைய நிலைமைகளை மதித்துநோக்கின், சிலசில விஷயங்களில் அறிவு வளர்ந்தும் தளர்ந்தும் காணினும், ஆண்டுகள் செல்லச்செல்ல அறிவுப்பெருங்கடல் பெருகி வருவது நன்குவிளங்கும். இதுவே இயற்கை நியாயமும் ஆம். இப்போலி உரையைத்தழுவி வருவனவே பழைய கிரந்தங்களில்உள்ளனவெல்லாம் கேவலம் உண்மையென்பதும், இப்பொழுது புதிதாய் அறியப்படுவன எல்லாம் முன்னரே அறிந்து அவற்றிற் கூறப்பட்டுள என்பதும். இவ்விரண்டு அபிப்பிராயங்களும் மெய்யாயின் தொன்னூலாராய்ச்சி அந்நூல்களைப் பழித்து இகழ்ந்ததாம்; அவற்றின் பொருளைமட்டும் அறிதலே நம் கடனாம். இப்போலி மொழிகள், இந்நாளிலே அன்னப்புள் இல்லை சிங்கம்இல்லை வெள்ளையானை இல்லை என்பாரைப் போல்வார் உரைகளேஎனினும், நுண்ணறிவினர் ஒருகணமும் மதித்தாய்தற்குரியனஅன்றேனினும், இப்பொழுது நமக்குள் மிகைபட வழங்கிவருதலால், அவற்றைக் கடிதலும் நமது கடனாம். பொதுஜன விரோதமானதோர் உண்மையை எடுத்துரைக்கப் புகுவான் உலும்கைப்யாறு புகழினும் வசையேயாம்;

அதினும் பாமரரேயன்றிப் பண்டிதரிற் சிலராலும் அவ்வுண்மை விபரீதமாக எண்ணப்படின், தன் துணிவுக்கேற்ற அளவு அவன் வசையுறல் திண்ணம். ஆயினுமென்? அவையஞ்சுவாரை 'இல்லாரோடொப்பர்' எனவும், 'கல்லாதவரிற் கடை' எனவும் இழித்துரைத்தாராதலின், புலவர் வசைமொழியையே ஏனையர் பயனில் கூற்றினும் அஞ்சி, எம்முரை 'அங்கணத்துள் உக்க அமிழ்து' ஆகாது, 'வளர்வதன் பாத்தியுள் நீர்சொரிந்தற்று' ஆமாறு திருவருளைத் தியானித்துக்கொண்டு, இவ்வபிப்பிராயங்களின் பொய்ம்மையை விளக்கப் புகுவாம். (இன்னும் வருகும்).

அ. மாதவையர்.

---

*செய்யுள்.

—:o:—

ஸ்ரீமத் கம்பராமாயணத்தில் ஆரணியகாண்டத்திலே ஸ்ரீராமனை நோக்கி விராதன் செய்யும் துதியை முதன்முதல் ஓதும்போது எனக்கு இன்னதென்று தெரியாத ஒருவித ஆனந்தம் உண்டாயிற்று. நாலாயிரப்பிரபந்தத்திற் சிற்சில பகுதிகளை ஓதுமிடத்துண்டாகும் ஆனந்தத்திலும் இது மிகுவதாதல் உணர்ந்து மீண்டுமீண்டும் அத்துதியை ஓதுதுதுண்டு. இங்ஙனமே இராமாயணத்தில் வேறு சில சந்தர்ப்பங்களிலும் புறநானூறு கலித்தொகை முதலிய சங்கத்தொகை நூல்களின் சிற்சில பாக்களிலும் இவ்விதமான கவியின்பம் உண்டாவதைப் பின்னர் நாளடைவில் உணர்ந்தேன். சில புலவர்களுடைய தனிப்பாடல்களிலும் இது பிரத்தியக்ஷ அனுபவமாக இருக்கின்றது. இங்ஙனம் ஜனித்தலான ஆனந்தத்துக்கு ஆதாரம் யாதோ என்று பலசந்தர்ப்பங்களிற் பலகால் சிந்தித்தேன். தமிழிலும் இங்கிலீஷிலும் இது சார்பான சில நூல்களை ஆராய்ந்துபார்த்தேன். இங்ஙனம் சிந்தித்தும் ஆராய்ந்துங் குறித்துக்கொண்ட சிலகுறிப்புக்களை இப்போது செய்யுள் என்னும் வியாசமாக விவரிக்கிறேன்.

வடமொழியில் காவியம் என்பதும் யூரோப்பிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் தமிழில் செய்யுள் என்பதும் ஒருபொருளன

---

* இராசதானிக்கலாசாலை மாணவர் தமிழ்ச்சங்கத்தில் ஸ்ரீ K. B. இராமநாத ஐயரவர்கள் M. A. முன்னிலையில் வாசித்தது.

வே. தமிழிற் செய்யுள் என்பது தொழிலாகுபெயர். யூரோப்பிய பாஷைகளில் போயெட்ரி என்பதும் இதுவேயாகின்றது. வடமொழியில் காவியம் என்பது கவியாற்செய்யப்பட்டது என்பதாம். தமிழில் செய்யுள் என்பதற்கு யாப்பு-பா-பாட்டு-தொடர்பு-தூக்கு என்பன பரியாயநாமங்கள். இவைகளில் ஒவ்வொன்றும் காரணப்பெயராதல் வெளிப்படை. ஹீப்ரு பாஷையில் கவிகளுக்குப் பார்ப்பவர் என்று பொருள்படும் பெயர் வழங்குகின்றது. இது மிகவும் பொருத்தமானதேயாகும். உலகியலை ஏனையோரிலும் கவிகள் மிக நன்றாய் ஸூக்ஷ்பித்தறிவது எவரும்உணர்ந்தபடி. தெலுங்கில் "ரவி எருகனிதாவு கவி எருகுனு" என்னும் பழமொழி இதனை நன்குவிளக்குகின்றது.

வடமொழியில் செய்யுளைக் கவிதா என்பதும், செய்யுளியற்றுவோரைக் கவி என்பதும், கவிகளிற்சிறந்தோரை மகாகவிகள் வரகவிகள் என்பதும் மரபு. தமிழிலும் அவ்வழக்கையே வழக்காகக் கொண்டு உரைப்பதன்றிச் செய்யுளைப் பா என்றும் செய்யுளியற்றுவோரைப் பாவலர் என்றும் கவிஞர் என்றும், உத்தம கவிகளைக் கவிராயர் என்றும் கவிராசசேகரர் என்றும், உத்தமோத்தம கவிகளைத் தெய்வப்புலவர் என்றும் கவிச்சக்ரவர்த்தி என்றும் வழங்குவது மரபாக இருக்கின்றது. அவரவர்களுடைய ஆற்றலுக்கேற்றவாறு கவிகளை வடமொழியில் வகுத்துள்ள நாற்பாற் பகுப்பை மேற்கொண்டு தமிழிலும் பாவலர்களைச் சித்திரகவி, மதுரகவி, விஸ்தாரகவி, ஆசுகவி என வழங்குவது மரபாக இருக்கின்றது. இந்நால் வகைத்திறனும் ஒருசேரப் பெற்றவர்கள் சிலர் நாலுகவிப் பெருமாள் என்றும் நாற்கவிராசநம்பி என்றும் விருது பெற்றிருப்பது பிரசித்தம்.

இதுகாறுங் கூறியவற்றால் செய்யுளாவது மானுட சிருட்டியே என்பது தெளியப்படும். புலமைமிக்கவர்கள் யாதொரு கதையை உள்ளிட்டோ அல்லது யாதோர் அகப்புறப் பொருட்டுறையை உள்ளிட்டோ தாங்கள் வழங்குதலான மொழியில் அமைக்கும் பாடலே செய்யுள் என்பதாம். இது செய்யுளியலில் தொல்காப்பியர்,

"எழுத்து முதலா வீண்டிய வடியில்
குறித்த பொருளை முடிய நாட்டல்
யாப்பென மொழிப யாப்பறி புலவர்."

பொருப்பிற் கரிய புகர்முகவெங் கூற்றின்
மருப்பிற் றுளைப்புண்ண வாரா—திருப்பில் [10]
வடியுளவாஞ் செவ்வேல் மகதையார் கோமா
னடியுளவாம் வேந்தர்க் கரண்:— (எ*)

[பு]ரிந்த கனைகழற்காற்—
4 போர்வளவர் கோனை
வரிந்த திறைக்காக வாணு—தெரிந்தானை
வாங்கினு யென்று வழுதியர்கள் [11] தாங்கலங்கி
யேங்கினர் பாரிழந்தோ மென்றுஃ— (அ*)

(கட்டளைக் கலித்துறை*)

முருகுந்து காஞ்சியும் வஞ்சியுங் கொண்டமொய் தார்மகதன்
திருகுங் கனைகழல் வீக்கிய நாள்சீ[12] பராந்தகனிற்
பெருகுங் குருதிப்பு [ன*]ல் [ப]ாய் தொறுப்பில வாய்மடுத்துப்
பருகுங் கழுதுடன் செம்மை கொண்டாற்[13]கு[ம்]பனிக்கடலே(கூ*)

மட்டி(மெ)யன் றேறிய தார்புனை வாண புரந்தரனீ[14]
வெட்டியன் றேகொன்ற [ே]வண்மணிப் பாடி யுதிரவெள்ளத்
தொட்
5 டியென் றேனுந் து[15]லைவதுண் டேது[15]லை யாதபந்தி
கட்டியன் றேதெவ்வர் பாய்பரித்தானை கலக்குவதே :— (ய*)

கோங்குங் கலிங்கமுங் கொண்டகண் டாகொடித் தேருதியர்
தங்கும் படிகொண்ட வாணுதி பாதணி யாததென்கொல்
பொங்குஞ் சினப்படை வங்கார தோங்கன் புரண்டுவிழ[ச்*]
செங்குன்ற மின்று பிணக்குன்ற மாக்கிய தேர்மன்னனே :— (யக*)

(விருத்தம்*)

(தோழிவம்பென்றல்*) [ுதன்

வாரொன்று முலையாய்மற் றவரொன்றும்பழுதுரையார் மகதை வேங்
போரொன்றுபுரியாமுன்பெரியகுறிஞ்சியிலெழுந்தபுகையேகண்டாய்
காரன்று

10. வாராதிருப்பின்.
11. வழுதியர்கடாங்கலங்கி
12. நாட்சீ.
13. கொண்டார்க்கும்
14. புரந்தரநீ
15. தொலை·

6 கனலெரியை மின்னெ[16]ன்று தளரேலக் காரைக் காட்டி
லூரொன்று மதிள்விழுந்த பேரொலியும் உ[17]ருமதிர்வ தொக்குங் கா
[ணே :—(ூஉ*]

(ஷ வேறு*)

முன்பொரு படைக்கடலை விட்டரச ராஞர்
மூலதன மும்பரியு முறைமுறைய [ளிப்]பார்[த்]
தென்பகைய டக்கியபின் வாணகுல தீபன்
செய்ததனி யா(ழ்)ண்மைவட திக்கிலறிகிற்[பா][18]
மின்பொருப்பரண் விடா மலைய மானைப்
போரயிலி[ே*]ல பொருத போதொரு பெரும்போர்
வன்பனை[க]தவிர்[த்]ததொரு குதிரைவலி யா[ே*]ல
[வடுகர்]பனை[க தவி]ர்*] த்[த*]தொருகோலின்வலி
[யாலே:—(ூங*)

(நேரிசை வெண்பா*)

மண்ணுள் திகிரிக்கைவா—
7 ணன் வடுகெறிந்த
எ[19]ண்ணுயிரஞ்சூழ்ந்த எண்டிசையும்—புண்வடி[20]ந்த
நீரை[21] நீர்(க்)காக நிழலை நிழல்நெடும்பேய்த்
தேரேதேர் செஞ்சேறே சேறு :— (ூச*)

(கட்டளைக்கலித்துறை*)

[எ]ண்மேன் மிரும்பரித் தேர்மக தேச னிகல்விசையப்
பெண்மேல் விரும்பிவெம் போர்செய்த நாட்பின் குடா[22]வடுகர்
விண்மேல் நடந்து வடுகென்னு நாமம் விலக்குண்டபின்
மண்மேல் நடந்தது தேசிமுன் னை வடுகொன்றுமே :— (ூரு*)

(நேரிசை வெண்பா*)

சூழும் பிணவணைமேல் தோய்கழுகின் பந்தற்[23]கீழ்
வீழுங் கழுதினங்கள் மெய்காப்ப—

---

16. மின்னென்று
17. பேரொலியுமுருவதிர்
18. வடதிக்கிலறைகிற்பாம் பொன்பொரு பொருப்பரண். [வே. சாமி.]
19. வடுகெறிந்தவெண்ணுயிர.
20. புண்வார்ந்த-[வே.சாமி.]
21. நீரே.
22. கொடா
23. பந்தர்க்கீழ்

8 வாழுந்தன்

தொன்னகரே போல்வடுகர் துஞ்சத் துயிற்றியதே
மன்னவர்கோன் மாகதர்கோன் வாள் :— (யகூ*)

(விருத்தம்*)

ம(ண்)[24]டலளவு நிறைந்தொழுகு மதுமலர்த்தார்
மகதேசன் வை(ய்)யங் காக்கும்
அட[ல்*]வினவி லணிநெடுந்தேர் ஆய்
[மலர்த்தா]மனை வணங்கா வரசரியாவர்
கடலளவு நடந்ததவன் [குரக்[25]கு]
மவன்றன் கதிர்வேல்[26] மன்ன
ருடலளவு நடந்ததுமற் றுலகளவு
[நட]ந்ததவ னொருசெங் கோலே :— (யஎ*)

(நேரிசை வெண்பா*)

தேற்[27]கொடி மாமறுகில்[28] தெண்மணலைச் சேயிழையார்
மாற்[29]கு மருந்தாக்க வல்லவா[ம்*]—யாற்[30]கு
முயிராய செங்கோ லுயர்—
9 நெடுந்தேர் வாண
னயிரா வதத்தி னடி :— (யஅ*)

(விருத்தம்*)

சொல்லி விடுசெரு பீனவர் [சூ]ழு முரிமைகொ டாழ்கட
லெல்லி விடுப[ட] வேறுவ ரேனுமி யமபுரி யேறுவ[ர்*]
கொல்லி விடு[முத காதிபா] கூளி கருதி[31]ல ரூர்புக
வல்லிவிடும்[32] அயிராவதம் வாணன் வரவிடு நாளையே :—உ (யகூ)

---

24. மடலளவு.
25. நடந்ததவனுக்கினைச் சக்கர -[வே. சாமி.]
26. கதிர்வேன்.
27. தேர்க்கொடி.
28. மறுகிற்றெண்.
29. மார்க்கு.
30. யார்க்கு
31. கருதல
32 விடுமெயிராவதம்.

(நேரிசை வெண்பா.*)

வேளை (ெ)நடுங்கல்லும் வெட்டும்வீ ரற்கு[33]கையும்
மூளை தெறிக்கு முடித்தலையு—நாளை
மதிவா ணுதல்மடவாய் காணலாம் வாண
னதிவா ரணன்தொடர்விட் டால்:— (உய*)

(II*)

1 ஸ்வ[ஸ்தி ஸ்ரீ]பொன்பரப்பினான மகதைப்பெருமாள் கவி:—

2 (கட்டளைக் கலித்துறை*)

நாமான்[1]அரவிந்தமாங்[2]விந்தமாங்[3]முடி நாகர்சென்னிப்
பூமா[ன்*]விரும்பும் புகழ்மக தேசற்குப் போர்வழுதி
3 வாமா னி[4]றையிட்ட வன்[5]னாள் துடங்கி அவ்வானவர்தங்
கோமான் றனதென் றிரான்[6] அமராபதிக் குஞ்சரமே— (க*)

(வெண்பா*)

4 மேருவின்மேல் வென்று கயல்பொறித்த வார்த்தையினும்
வாரிபட வேலெறிந்த வார்த்தையிலும்—கார்விலங்கு
முன்னிட்ட வார்த்தையிலுந் தென்னவர் மாகதற்[க்குப்]ப்
பின்னிட்ட வார்த்தை [பெ]ரிது. (உ.*)

து. அ. கோபிநாதராவு.
திருவல்லிக்கேணி.

---

33. வீரக்குகையும்-[வே. சாமி.]

1 நாமானரவிந்த·

2 ·மான்.

3 ·மான்.

4 வாமான்றிறை.

5 ·வந்நாடொடங்கியவ்வான.

6. றிரானமராபதி

பாலமுது.

(௬அஎ-ம் பக்கத்தொடர்ச்சி.)

பால்வெண்ணிறம்பெற்றிருப்பதற்கு அதன்நிணமே காரணமாகும். மற்றும், ஓர் தெளிவானகண்ணாடிப்புட்டியில் நீரைவிட்டுப்புட்டியின் ஓர் பக்கத்திற்கைவிரலைக்கொண்டு அதற்கெதிராகவுள்ள பக்கத்தினின்று நீரின்மூலமாக விரலைப்பார்த்தால் விரல்கண்ணுக்குப்புலப்படும். அதைப், புட்டியில்பாலைக்கொட்டி நிரப்பியபின் பார்த்தால் கைவிரல் தோன்றுவதில்லை. கண்ணாடியின்மூலமாகப்பொருள்களைப் பார்க்கவல்லோம். அவ்வாறே சில உலோகங்களை மெல்லியதகடாகவடித்தபின் அவைகளின் வழிப்பார்ப்பின் பொருள்கள் சற்று விளங்குபவையாயுள்ளன. இவ்வாறு தமதுமூலமாகப்பொருள்களைத் தோற்றத்திற்கெதிர்ப்படுத்தக்கூடியவைகளைமூலத்தோற்றத்திற்கான பொருள்களென்று (Transparent bodies) கூறத்தகும். தோற்றத்தைத்தடுக்கும் பொருள்களை மூலத்தோற்றத்திற்காகாப் பொருள்களென்று கூறத்தகும் (opaque bodies). சுருக்கிச்சொல்லின் முதலதைத் தெளிவாகவும் பின்னதை மங்கலாகவுங்கூறலாம்.

பாலின் நிணமானது மங்கலாகவும் (opaque) ஒளியைத்திருப்பிச்செலுத்தவல்லதாகவும் (refracting light) பார்க்கிறோம். ஆதலாற்றான் பால் வெண்ணிறம்பொருந்தியுள்ளது. இத்தகையபாலின் நிணத்தைப் பாலினின் றெடுத்தபிறகு அதன் ஜலபதார்த்தம் வெண்ணிறமற்று நீர்போலுள்ளது. எப்படி நமதுஉடலினது இரத்தத்தினின்றும் சிவப்பு நிறங்கொடுக்குமோர் இரும்புகலந்த பொருளை (Hæmoglobin) நீக்கிவிடின் இரத்தம் நீர்போற்றங்கவல்லதோ (blood plasma) அவ்வாறே பாலினின்றும் வெண்ணிறத்திற்குக்காரணமாகிய அதன் நிணப்பொருள்நீங்க, பால் நீர்போலக்காணவல்லது (milk plasma). ஆதலால் சிறந்ததோர் பசுவின்பாலானது தகுந்த வெண்ணிறத்தையும் மிக்கமங்கலையும் கொண்டிருக்கவேண்டும். அவ்விதமின்றேல் பாலில்நீர்கலந்திருத்தல் நிச்சயிக்கலாம். இடையர்கள் பாலினதளவைப் பெருக்கவெண்ணிப் பால்கறக்கச்சற்றுமுன்னமே

பசுவிற்குத் தண்ணீரையூட்டிவருவதுண்டு. இது செய்யின் பாலில் நீரினது அளவுமிகுந்து நிணத்தினது அளவுகுறையும்.

பாலில் வெகுவளவு நீராகவேயுள்ளது. டாக்டர்வாயல்கர் துரை அவர்கள் (Doctor Voelcker) இரசாயனபரீக்ஷையினால் 100-பங்கு பாலில் ஏறக்குறைய 93-பங்கு நீராகப்பார்த்து நிச்சயித்திருக்கின்றனர். ஆதலால் பாலில்நீரானது அதிகரித்திருப்பின் அப்பாலைச் சிறந்ததாகக்கொள்ளலாகாது. பாலினது கனத்தை அதாவது அதன் நீரினதுசிற்றளவை (Minimum percentage of water) ப்பரிசோதிக்க ஓர்வகைக்கருவியுண்டு. அதன்பெயர் பாலைப்பரீக்ஷிக்குங்கருவி (lactometer) யென்பது.

நாம் தினந்தோறும் உட்கொள்ளுமுணவானது ஆகாரப்பைமுதலியவற்றையடைந்து இரத்தத்திற்கரைந்து சரீரத்திற் பரவவல்ல பக்குவத்தையடைய, கடையில் ஆகாரமானது உடலிற்பொருந்திவலிமையைக்கொடுப்பதாயுள்ளது. உடலில் அவ்வவ்விடத்தில்ஜீவாதாரப் பொருள்களைக்கொடுத்து இரத்தம்செல்வதுமன்றி அவ்வவ்விடத்துண்டாம் கழிவுப்பொருள்களையும் கொண்டு அது வீடுகளிலுள்ள சாக்கடையைப்போல் ஓடுவதாயுமுள்ளது. ஆதலால் நாமுண்ணுமுணவினுடைய சுத்தக்கரி, ஜலவாயு, பிராணவாயுவாகிய இவைகள்தேகத்தில் ஒன்றுசேர்ந்து நீராகவும், கரிமலவாயுவாகவும்(carbon dioxide) பிரிகின்றன. பிராணவாயுவும், ஜலவாயுவுஞ்சேர்ந்து நீராகின்றன. சுத்தக்கரியும், பிராணவாயுவுங்கூடிக் கரிமலவாயுவாகின்றன. நீரானது தேகத்தைவிட்டுப்பலவாறாக வெளியாகின்றது. நாம் வெளியேவிடும் சுவாசத்திற்கரிமலவாயுவும், நீராவியுங்கலந்துள்ளன. உடற்றோலினின்றும் வெளியாம் வெயர்வையில் மெழுகுபோன்றதோர் பதார்த்தத்துடன் (Sebaceous matter) நீர்கலந்துள்ளது. மற்றும் கழிவுப் பொருள்களில் நீர்திரண்டிருக்கவுங்காண்கிறது. ஆதலால் அன்னத்துடன் நாம்உட்கொள்ளும்தண்ணீரெல்லாம் பலவாறாகத்தேகத்தைவிட்டுவெளியாகப் பார்க்கிறோம். அவ்விதமே பாலின் கண்ணதாகிய நீரெல்லாம் தேகத்தினின்று வெளியாகத்தக்கதாகையால் அதன் நீரை உணவுடன் உட்கொள்ளத்தக்க நீரிற்கொப்பிட்டுக் காணத்தகும். மற்றும் பாலின் ஊனனது (fat-நிணம்) மேற்கண்ட மூன்று வகை

ப்பொருள்களையும் அதாவது சுத்தக்கரி, ஜலவாயு, பிராணவாயு வாகிய இவைகளைப்பெற்றுள்ளதாக முன்னமேயே சொல்லிவந்தோம். ஆதலால் இவையும் மேற்கண்டபடி நீராகவும், கரிமலவாயுவாகவும் பிரிந்து வெளியேசெல்லவல்லவையென்று அறியலாகின்றது.

நாம் உட்கொள்ளும் சுவாசத்தின் வழியினாலே வாயுவானது (oxygen) கலந்து வருகின்றது. உட்கொள்ளும் காற்றில் பிராண வாயு சுத்தமாயுள்ளது (pure oxygen). இத்தகைய பிராணவாயு உடலின் கண்ணுள்ள உணவினது சுத்தக்கரி, ஜலவாயு ஆகிய இவைகளுடன் வேண்டியவளவு கலந்து நீரையும், கரிமல வாயுவையு முண்டாக்கக் கரிமலவாயு இரத்தத்தினுட்சென்று முக்கியமாய் வெளிச்சுவாச மூலமாகத் தேகத்தைவிட்டுவிலகுகிறது. அவ்வாறே பாலினது ஜல வாயுவும், சுத்தக் கரியும், வேண்டுமளவு பிராண வாயுவுடன் கலந்து வெளியாகத்தக்கவை. பிராணவாயுவானது, சுத்தக்கரி, ஜலவாயு இவைகளுடன் தக்கபடி கலந்து கரிமலவாயு, நீர் இவைகளை உண்டாக்குங்கால் உஷ்ணமுண்டாகுதலின் தேகத்தி லெப்பொழுதும் சற்று வெப்பமிருக்க வுணர்கிறோம். நாம் வெளிவிடும் சுவாசமானது வெப்பமாக விருக்கின்றது. இதன் காரணம் முன் கூறியதேயாகும். மனித வுடலினும் மிருகவுடலினும் வெப்பமுண்டாக்குவது அவ்வவ்வுடலின் நிணமே யாகும். ஆதலால் நிணமானது தேகவுஷ்ண முண்டாக்கும் பொருளாம். இந்நிணத்தை மெழுகுவத்தியின் மெழுகுக்கொப்பிட்டு நமது ஜீவ வொளியை நிலைபெறச் செய்வதாகக் கொள்ளத்தகும்.

தேக வளர்ச்சியை முழுதும் பெற்றுப் பக்குவமாகசவுக்கிய மடைந்துள்ளவோர் மனிதனது தேகத்தை அடியில் வருமாறு தேர்ந்து கொள்ளலாகும். இவ்வளவுகள் கவனிக்கத்தக்கவை.

அவனது உடற்பளுஉத்தேசம் 15¼-பவுன். இத்தகையவுடலின் கண்ணுள்ள உத்தேசப் பிரமாணங்களையும் ஒருவாறளடுத்துச்சொல்லத்தகும். அவை நூற்றுக்கு :—

(1) தசையும் தசைநாரும் (Muscles and Tendons) } 41

(2)	எலும்புக்கட்டிடம் (Skeleton)	16
(3)	உடற்றோல் (Skin)	7
(4)	நிணம் (Fat)	18
(5)	மூளை (Brain)	2
(6)	மார்பினுட்புற அங்கங்கள் (Thoracic Viscera)	2
(7)	வயிற்றினுட்புற வங்கங்கள் (Abdominal Viscera)	7
(8)	இரத்தம் (Blood)	7
	மொத்தம்	100

இத்தகைய வுடலினுள்ள இரத்தம் மொத்தவளவில் ஒருகாலன் (Gallon) அதாவது எறக்குறைய 3-படிக்கதிகப்பட்டுள்ளது. இவ விரத்தத்தினது பளு உடற்பளுவில் 14-இல் ஒன்றாகும். மேற்கண்ட வளவுகள் ஹக்ஸ்லீ (Professor Hnxley) துரையவர்களிட்ட வெண்களாம்.

மேற்கண்ட கணக்கில் உடற்குரிய நிணம் காற்பங்களவுக்குச் சற்றுக் கீழதாகப் பார்க்கின்றோம். ஆதலால் உடல் நிணம் அவ்வளவிற்கதிகமாயினும் குறைவாயினும் தேகம் சவுக்கியத்தில் மட்டுப்படும். உடலது வெப்பத்தைச் சரிவரக்காண அவ்வளவு நிணம் உடலில் வேண்டுகின்றோம். ஆதலால் வேண்டுமளவு நிணங் கொள்ள ஊனுள்ள ஆகாரத்தை உட்கொள்ளவேண்டும்.

(இன்னும் வரும்.)

செ. வீ இராஜகோபாலாசாரி.
நார்மல் ஸ்கூல், மதுரை.

சிவமயம்.

உயிர்.

உயிருண்மைக்குப் பிரமாணம்.

க. உயிரென்பது சூன்யமென்றாலென்னையெனில், அவ்வாறு இல்லையென்கின்ற அறிவுடனே சொல்வதொன்றுளதாய் நிற்றலால், அதுசூனியமன்றென்க.

உ. உடம்பே உயிரென்றாலென்னையென்னில், உடம்பினிடத்தே நின்று, யானென்றும் எனதென்றுஞ் சொல்லப்படுஞ் செருக்கைப்பொருந்துதலால், உடம்பு உயிரன்று, உடம்பின் வேறாயுயிரென்பதொன்றுண்டென்க;

உடம்பின் வேறாயுயிருண்டென்பானேன்? இந்த உடம்பு தானே அறியுமென்றாலென்னையெனில், அவயவங்களினாலே யொன்றுங் குறைவின்றிப் பிணமாகக் கிடக்கும்போது அவ்வுடம்பிலே அறிவில்லை ஆதலால் உடம்பு உயிரன்றென்க;

பிணமாகக்கிடக்கும்போது இவ்வுடம்பினுள்ளே பிராணவாயு நீங்கினபடியால் அறிவுநிகழாதென்பாயாயின், நீயுயிரெனக்கொண்ட வுடம்பிற்குக் காரணமாயிருக்கின்ற பூதங்களின் கூட்டங்களிலே ஒன்றாயினுங் குறைவின்றிக் கிடக்குமுறக்கத்தினும் பிராணவாயு நிகழ்ந்திருந்தும் அறிவில்லையாதலால், உடம்பு உயிரன்றென்க.

ந. மெய், வாய், கண், மூக்குச், செவிகளினிடமாயிருக்கின்ற ஐம்பொறிகளே உயிரென்றாலென்னையெனில், இவைகள் ஞானேந்திரியமாதலின் ஞானமாத்திரையன்றி, ஞானங் கிரியை யிச்சையாகிய மூன்றையுமுடைமையால், ஐம்பொறிகளுயிரல்லவென்க.

பிணமாகுங்காலத்திற் கெடுவதாகிய ஐம்பொறிகளே இவ்வுடம்பினின்று நனவிலே யறியும் உறக்கத்திலே அறிதலின்றி யொடுங்கிநிற்கு மென்றாலென்னையெனில், நனவிலே அவ்வைம்பொறிகளறிவதும் ஒவ்வொரு பொறியாக அறிவதன்றி அவைகளொருங்கே யறியமாட்டாவென்க. ஒன்றொன்றாக வறிவதே அவ்வைம்பொறிகளியல்பென்பாயாயின், அவ்வாறாயினும் அவ்வைப்பொறிகளிலே ஒரு

பொறி யறிந்ததை மற்றொரு பொறி யறியமாட்டாது, ஆதலால் அவ்வைம்பொறிகளாலும் ஐம்புலன்களையுமறியத்தக்கதொன்றுண்டு அதுவே உயிரென்க.

ச. மனம், புத்தி, ஆங்காரஞ், சித்தம் என்னு நான்காகிய அந்தக்கரணங்களே அறியுமுயிரென்றாலென்னையெனில், இவ்வந்தக் கரணங்களுமுற்கூறிய ஐம்பொறிகளைப் போலவே ஒன்றனையொன்றுணரமாட்டா; ஆதலால் உயிரானது இவற்றின் வேறாகி யானெனதென்னுஞ் செருக்கு அதற்கேதுவாகிய *ஆணவமலத்துடனியைந்து நிற்குமாகலால், அவ்வந்தக்கரணங்களாலாகிய நான்கு தொழிலையும் அவற்றோடு கூடியறிந்து, அவற்றையடக்கவேண்டும் போது சொப்பன முதலிய அவத்தைகளிற் செலுத்தி [1] யுட்கருவியாக்கி, அவற்றையாக்கவேண்டும்போது சாக்கிராவத்தையிற் செலுத்திப் [2] புறக்கருவிகளிற் போக்கி வேறு வேறு அவத்தையுற்று நிற்கும். ஆதலால்உயிர் அவ்வந்தக்கரணங்களின் வேறென்க. இனி இவ்வந்தக்கரண நான்கும் ஒரு விஷயத்தை யறிதற்குக்கருவியாகப் பொருந்தி உயிரோடொற்றித்து நின்று நிகழ்வனவாம்; இவைகள் கண்ணுக்குவிளக்குப் போல உயிர்க்குக் கருவியாய் வேறு நிற்பனவென்றறிந்து நீங்கிநின்று இவற்றைக்கொண்டறியுங் கருத்தாவாகிய உயிருண்மையை யுணர்ந்தவரே ஆன்ம சொரூபத்தையுணர்ந்தோராவர். இங்ஙன மறியுமறிவே பசுஞானமென்க; இதனைத்த ருவது சிவஞானம்; அது பின்னர் வரும்.

இவ்வந்தக்கரணங்கள் நான்குடன் புருடதத்துவ மொன்று கூட்டி ஆகவைந்தினையும் ஆங்காரம், புத்தி, மனம், சித்தம், [3] உள்ளம் என்றிம்முறையே வைத்து, இவற்றினைச்செலுத்தும் அக்கரங்கள் முறையே அகரமும், உகரமும், மகரமும், விந்துவும், நாதமுமெனி [4] ஐந்தாகக்கூறி, இவ்வைந்தக்கரங்களையுஞ் செலுத்தும்

---

*ஆணவமலம் இன்னது என்பது சிவஞானசித்தியாரிலிரண்டாஞ் சூத்திரத்தாற் காண்க.

1 உட்கருவி | சிவ—இரண்டாஞ்சூத்திரத்திற்காண்க.
2 புறக்கருவி |
3 உள்ளம்—புருடதத்துவம்.
4 இவ்வைந்தக்கரமுஞ்சமட்டியிற்பிரணவமாம்.

அதிதேவதைகள் அயன், அரி, அரன், மகேசன், சதாசிவன்-ஐவரெனக்கூறி, இம்முத்திறத்தைந்துடன் ஆன்மா இயைந்தவழி அறிதற் பயனுறுமென்றும், இயையாதவழிச் சடம்போல அறிவில்லாததேதொடொக்குமென்றும், இவ்வியல்பெல்லாம் இருவகைச்சுவாசமுமடக்கிச் செய்யும் யோகப்பயிற்சியிலினிது விளங்கு மென்றுங் கூறினர்; சிவஞான சித்தியாரிற் காண்க.

௫. முற்கூறிய கருவி கரணங்கள் முதலிய அனைத்துங்கூடிய கூட்டமாகிய சமுதாயமே உயிர் என்றாலென்னையெனில், அவையெல்லா நீங்கிய நிலையாகிய துரியாதீதத்திலே யுளதாதலால், சமுதாயம் உயிரன்றென்க. துரியாதீதத்திலே யுயிருண்டென்பது விழித்தபின்னர்ச் சுகமாகத் துயின்றேன் என அறிவு நிகழ்தல்பற்றித் தெளிந்துகொள்க. இவ்வாறன்றி முற்கூறிய கரணங்கள், அக்கரங்கள், அதிதெய்வங்களாகிய பலபொருட்கூட்டமே உயிர்வடிவமென்பாயாயின், ஆராய்வார்க்குக் கூட்டமென்றொரு பொருளில்லையாகி அப்பலபொருளே உண்மையாகத் தோன்றுதலால் அக்கூட்டமென்பது உயிரன்றென்க.

கூடுதலாகிய அவை பதினைந்துமே உயிர் என்பாயாயின், அறிவோரெல்லார்க்கும் அப்பதினைந்தும் அறிபவனாகிய ஆன்மா வேறாகவும் அறியப்படும் பொருளாகிய அப்பதினைந்தும் வேறாகவும் விளங்குதலால் அவை உயிரன்றென்க.

௬. சூக்குமவுடம்பே உயிரென்றாலென்னையெனில், அச்சூக்குமவுடம்பு கனவுடம்பெனக் கூறலாற், கனவின் மாத்திரமறியவேண்டும். அவ்வாறன்றிக் கனவிலே அறிந்தவிடயத்தைச் சாக்கிரமாயநனவிலேயறிந்து நிற்பதாற், சூக்குமவுடம்பு உயிரன்றென்க. சூக்குமவுடம்பாவது மனதிதன்மாத்திரைகளாம். (சிவ - இரண்டாஞ் சூத்திரத்திற் காண்க.)

௭. பிராணவாயுவே உயிரென்று லென்னையெனின், கருவிகளொடுங்கின விடத்தே பிராணவாயு இயங்கி நிற்பதால் அப்போது அனுபவியாது, கருவிகளொடுங்காது விழித்தபோது இன்பத்துன்பங்களை யனுபவித்து நிற்றலாற், பிராணவாயு உயிரன்றென்க.

பிராணவாயு அடங்குதலும் விடுதலுஞ்செய்தாலே அறிவு நிகழக் காண்பதனால், அப்பிராணவாயுவே முற்கூறிய ஐம்பொறியையுங் கொண்டறிவதாகியவுயிர் என்பதுபொருந்தும். உடம்பிலே உறக்கத்தில் அப்பிராணவாயு இயங்கினும் அங்கே கருவிகளில்லாமையால் அறிவில்லையாகி அறியாதாயிற்று என்பாயாயின், அது பொருந்தாது; அறியப்படுங்கருவிகளையுடைய கர்த்தா அப்பிராணவாயுவானால், அப்பிராணவாயுவாகிய கர்த்தா இருக்கும்போது அக்கருவிகள் அக்கர்த்தாவைவிட்டு நீங்குதல் கூடா. அதலால், அக்கருவிகளையடக்குதலும் விடுதலுஞ்செய்து அப்பிராணவாயுவையுங்கொண்டு அறிவதாகியவுயிர் வேறுண்டென்க.

அ. பிரமமே உயிரென்றாலென்னையெனில், அறிந்தாங்கறிதலின்றி ஐந்தவத்தைப் பட்டறிதலானும், அறிவிக்கவறிதலானும், பிரமமுயிரன்றென்க.

இனி ஆன்மவிலக்கணம்.

க. சீவான்மாக்களெல்லாம் பிரமப்பொருளின் பரிணாமமாய்த்தோன்றி, அறிவிச்சைசெயல்களையடைந்து தீயுஞ் சூடும்போலப் பேதாபேதமாகிய குணகுணித்தன்மையுற்றுப் பலவேறுவகைப்பட்டு நிற்குமென்றாலென்னையெனில், அவ்வாறாகிய சீவான்மாக்களுக்குப் பொறிகரணமுதலிய கருவிகளைப்பொருத்தினாலன்றி அறியமாட்டாமைக்குக்காரணம் யாது? அதனால் அது பொருந்தாதென்க.

(இன்னும் வரும்).

இங்ஙனம்

இராமசாமிக்கவிராயர்.
சேற்றூர்ச்சம்ஸ்தான வித்துவான்.

புத்தகக்குறிப்பு.

சிவத்தலமஞ்சரி:—இஃது, இப்புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திற் சிவபெருமான் திருக்கோயில்கொண்டருளும் ஆயிரத்தெட்டுத் திருப்பதிகளுள் தேவாரப்பாடல்பெற்ற இருநூற்றிருபத்துநான்கு ஸ்தலங்களின் பெயர், இடம், அவற்றின்மார்க்கம் முதலிய விசேடங்

களை நன்கு விளக்கி எழுதப்பெற்றது. தலவிசேடங்கள் தெரிய விரும்புவோர்க்குஇது பெரிதும்பயன்படத்தக்கது. இந்நூல், சிறந்தகாகிதத்தில் அழகாகஅச்சிடப்பட்டிருத்தல் இதனைப்பலரும் அவாவுதற்கு மற்றோர் காரணமாகும். சைவாபிமானிகள் ஒவ்வொருவர் கையினும் இது தவறாதிருத்தற்குரியது. இஃது எழுதியோர் பென்ஷன் டிஸ்டிரிக்ட் முன்சீப் வடக்குப்பட்டு ஸ்ரீமாந்-வ. த. சுப்பிரமணிய பிள்ளையவர்கள். இவர்கள் தம் இளைப்பாறுங்காலத்தை ஜனோபகாரமான இத்தகைய நல்வழியிற் செலவிடுதல் நாமெல்லாம் மகிழ்ந்து புகழத்தக்கதாம். இப்புத்தகவிலை அணா-6.

சுதேசி:—இப்பெயர்பெற்ற வர்த்தமானபத்திரிகையொன்று ஏறக்குறைய ஓராண்டாகச் சென்னையினின்று வாரமிருமுறை வெளிவருவதென்பது நம்மவர் பலரும் நன்கறிந்தது. இது தொடங்கப்பெற்றுச் சிலகாலமேயாயினும், இதனால் தமிழர் அடைந்துவரும் தேசஞானம் பெரிதாகும். இதனாசிரியர் உலகவறிவு நிரம்பவுடையராய் அவ்வக்காலங்களில் எழுதிவரும் அரும்பெரும் விஷயங்கள் தேசத்தவர்க்குப் பற்பல நன்மையை விளைத்திருக்குமென்பதில் ஐயமில்லை. வர்த்தமானபத்திரமென்று தமிழ்நாட்டில் உலவுவனவற்றிற் சுதேசமித்திரன், சுதேசிபோன்ற சிறுவிரல்விட்டெண்ணக்கூடியவைகளே, ஒழுங்காகவும் சுவாபிப்பிராயவன்மை பெற்றனவாயும், ஜனங்களுக்குள் மறைந்துகிடக்கும் ஒற்றுமையுணர்ச்சி, தேசாபிமான முதலிய அருங்குணங்களைக் கிளரச்செய்வனவாயுமிருந்து, பெரும்பயனளிப்பன. மேனாடு மகோந்நதநிலையில் வந்திருத்தற்குப் பற்பல காரணங்களுண்டாயினும், இத்தகைய பத்திரிகைகள் அதற்கு ஒரு முக்கியகாரணமென்பது திண்ணம். அந்நாட்டவர்போல் எல்லாரும் அதனை அபிமானிக்கும் அறிவுமுதிர்ச்சி நம்முள் இன்னும் பரவவில்லையாயினும், அந்நிலை வெகுவிரைவில் நந்தேசத்தையடையாமற்போகா. இச்சுதேசியின் அதிபர், இனிமையான செந்தமிழ்நடையில் ஒவ்வொருவரும் இன்றியமையாது தெரியவேண்டிய எத்தனையோ நல்லபிப்பிராயங்களை வெளியிட்டுவருவதோடு, பிறரெழுதும் சிரியவிஷயங்களாலும் பத்திரிகையைச் சிறப்பித்துவருகின்றனர். இவர் தம் நாட்டுக்குப் பேருபகாரம் புரிந்துவருதற்கு நம்மவர் செய்யுங்கைம்மாறு அள

விலதாக வேண்டுமாயினும் அத்தகையாளரை அம்முயற்சியில் மேலும் ஊக்கியுதவுதல் பலரும் இப்போது எளிதிற் செய்யத்தக்கதென்பதை நாம் வற்புறுத்துகின்றேம். இப்பத்திரிகையும் இதனதிபரும் என்றும் நின்றுநிலவத் திருவருள்பெருகுக.

சக்கரவர்த்தினி:—இது சென்னையினின்று மாதந்தோறும் வெளியேறும் ஒரு தமிழ்ப்பத்திரிகை. பெண்பாலாரின் அறிவுப்பெருக்கத்துக்கென்று தொடங்கப்பெற்றது. இதன் முதலிருபகுதிகள் கிடைக்கப்பெற்றேம். நம்நாட்டு மாதர்கணிலையைச் சீர்ப்படுத்தற்கென்றே எத்தனைபத்திரிகைகள் வெளியேறினும் அவை மிகையாகாவென்று பத்திராசிரியர் இப்பத்திரிகையின்முதற்பகுதியில் எழுதியது முற்றும் பொருத்தமேயாம். ஒருநாட்டின் சீருஞ்சிறப்பும் அந்நாட்டு மாதர்களைப் பொறுத்தே பெரும்பாலும் இருத்தலின், தேசநலத்தைக்கருதும் நன்மக்களெல்லாம் அதினுங்கவலை செலுத்தற்குரியர். இப்பத்திரிகை, பெண்பாலார்க்கு முக்யமாகத் தெரியவேண்டிய பல இனிய வியாசங்களைத் தன்பால் நிரம்பவுள்ளது. இதுபோன்ற சிறந்த பத்திரங்களை நம் நாட்டுமாதர்கள் பெற்றுப் படித்துவரின் அவர்கள் இலௌகிக வைதிக ஞானங்களில் நல்லதேர்ச்சிபெற்று விளங்குவரென்பது திண்ணம். இதற்குச் சுதேசமித்திரன் பத்திராசிரியராகிய ஸ்ரீ. ஜி. சுப்பிரமணிய ஐயரவர்கள் முதலிய நல்லறிஞர்கள் விஷயமெழுதி வருகின்றனர். இதன் பத்திராசிரியர் ஸ்ரீ சி. சுப்பிரமணியபாரதியாரவர்கள். இப்பத்திரிகையை எல்லாரும் அபிமானித்து, அதனை நடாத்துபவர்க்கு ஊக்கமளித்துவர நம்மவர் கடமைப்பட்டவர்களாவர்.

பத்திராசிரியர்.

பிழைதிருத்தம்:—"பாரதகாலமுந் தமிழரும்" என யான்எழுதிய வியாசத்தில் "பாலைக்கௌதமனுரென்னும் பெயர்க்காரணம் இவர் பாடிய மூன்றும்பத்து முழுதும் பாலைத் திணைபற்றி வருதல்பற்றியேயன்றி வேறன்று" என்றெழுதியது தவறு; அவ்வாசகத்தை அவ்வியாசத்தினின்று நீக்கிவிடுமாறு செந்தமிழறிஞர்களை வேண்டுகிறேன்.—மு. இராகவையங்கார்.